# முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி..

2 அணா

முரசு 2 | சென்னை | 8—7—55 | வெள்ளி | ஒலி 15





நெருப்புக் குண்டத்திற்குப் பக்கத்திலே அவள் நிறுத்தப்பட்டிருந்தாள். கொழுந்து விட்டெரியும் தீயின் சிவப்பு நாக்குகள் அவளை இரையாக்கிக் கொள்ளத் துடிப்பதுபோல் நீண்டு உயர்ந்து வளைந்து நெளிந்து ஆடிக்கொண்டிருந்தன. அவளுக்குத் தரப்பட்ட தண்டனை மிகப்பயங்கரமானது. அதை நிறைவேற்றுவதற்காகவே அவள் அங்கே நிறுத்தப்பட்டிருந்தாள்.

அக்கினி குண்டத்தை அவள் மூன்று முறை வலம் வரவேண்டும். மூன்ருவது முறை அவள் அந்த நெருப்பிலே தூக்கி ஏறியப்படுவாள். அவளாகவே விழுந்து விட்டாலும் பாதகமில்லை—தடுக்க வேண்டாமென்று உத்திரவு. சில வினாடிகள்தான் தீயிலே கிடக்க அனுமதிக்கப்படுவாள். அரைவேக்காடாக அவள் வெந்ததும்—குற்றுயிரும், குலை உயிருமாக வெளியிலே தூக்கப்படுவாள். தங்கம் போன்ற அவள் மேனியிலே எங்கெங்கே ரணம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்ப்பார்கள். அந்த ரணங்களை ஆற்றி, உயிரூட்ட மருத்துவரை அழைப்பார்கள் என்று யாரும் எண்ண வேண்டாம். நன்ருக எரிச்சல் தரக்கூடிய மிளகாய்த் தூளை அந்தப் புண்களிலே தூவுவார்கள். வேதனை தாங்க மாட்டாமல் அவள் எழுந்து குதிப்பாள்-துடிப்பாள்—

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

# கேள்வி கேட்டவர் பதில் சொல்கிறார்!

**அன்புள்ள குமார்,**

அதிகாரக் கோபுரத்தின் சலசத்தைப் பிடித்துக்கொண்டு, பதவி லாகிரியிலே லயித்திருந்தவர்களெல்லாம், பின்னர் ஒரு நாள் திடீரென்று கீழே விழுந்து சிதறிப்போன கதைகளையெல்லாம் நான் சொல்லி நீ தெரிந்துகொள்ளவேண்டிய நிலையிலே இருக்கமாட்டாயென்றே நினைக்கிறேன். அந்த வெறியர்களின் கொடுங்கோலுக்கு சிகப்பு வர்ணம் பூசி, அபாயக் கம்பங்களாக வரலாறு தன் ஏடுகளிலே சொருகி வைத்திருக்கிறது.

அச்சத்தால் அவனியெல்லாம் ஆட்டிவைத்த நெப்போலியன்—வல்லூறு வேஷத்திலே வெண்புறுவைத் துரத்திவந்த அந்த வீராதி வீரன்-கடைசிக் காலத்திலே எல்பா தீவிலே அனாதையாகக் கண்ணை மூடினான். அருமை அம்மாவையும், அன்புக் குழந்தையையும்கூட சாகிற சமயத்தில் ஒரு முறை பார்த்து மனச்சாந்தி பெற முடியவில்லை. இது, அவனாகத் தேடிக்கொண்ட முடிவு!

கதையாகச் சொல்வார்கள், மக்களிடையே மதிப்பு பெறத் தவறிவிட்ட, அந்த மாஜியைப் பற்றி!

இன்று ஏறக்குறைய அதே நிலைமைதான் குமார், நம்முடைய ஆச்சாரியாருக்கும் ஏற்பட்டிருக்கிறது! கற்கள் அம்புகளாக அவர் மீது மோதவில்லை—சொல்லம்புகள் அவருடைய சூழ்ச்சிக்கார இருதயத்தை ஈட்டிகளாகத் துளைக்கின்றன!

ஜூலை 1-ம் தேதியன்று சென்னை லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் அவர் பேசியதை நீ பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். சுமார் இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாக அவர் பி.சி.ஜி. யைப் பற்றிப் பேசினாராம்!

"உடல் நலம் சரியில்லை; வயதாகிவிட்டது; ஓய்வு பெறப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, சட்டசபையிலிருந்து பேசுவார்-என்றுதானே எதிர்பார்த்திருப்பாய்? நீ மட்டுமென்ன; வெளியூரிலே இருந்துகொண்டு காகிதத்தில் அச்சாகி வருவதிலெல்லாம் 'அரிச்சந்திரன் அம்சம்' இருப்பதாக நினைக்கும் பாமர மக்களும் அப்படித்தான் நினைப்பார்கள். உண்மையைச் சொல்கிறேன், குமார்! அவர் பேச்சை ஆராய்ந்த பிறகே உனக்கு எழுதுகிறேன். அந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர் அவரேதான்!

ஆச்சரியப்படாதே குமார்! செல்லாக் காசிற்கு அங்காடிக் கடையிலே என்ன வேலை? எனவேதான் எங்கோ பேசவேண்டியவர் வேறு எங்கோ பேசுகிறார்.

"பி. சி. ஜி. பற்றி நான் நிறைய எழுதியிருக்கிறேன். பத்திரிகைகளும் அவற்றைப் பிரசுரம் செய்தன. சில தினங்களுக்கு முன்னால் சென்னை சுகாதார மந்திரியார் இருக்குமிடம் தெரியவில்லை. முக்கியமான அரசியல் பிரச்னை குறித்து அவரது அபிப்பிராயத்தை இந்த மாநிலத்து மக்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பில்லை. குருகுலத்துக்குள்ளேயே அவரது அரசியற் கருத்துக்கள் சிறை வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இங்கோ இளைஞர் சங்கம் என்ற பெயரில் ஆச்சாரியாருக்கு விளம்பரம் வழங்க ஒரு 'ஏஜன்ட்' இருக்கிறார்! கொஞ்சம் மறைமுகமாக அவரே சொல்லிக்கொள்கிறார், 'நான்தான் இந்தக் கூட்டத்தைக் கூட்டினேன்' என்று! அந்தக் கூடாரத்துக்குள்ளேயே 'அவாள்' கூட்டம் எவ்வளவு முன்னேறியிருக்கிறது, பார்த்தாயா? தங்கள் வேதிய குல விளக்கு அணைந்துவிடக் கூடாதே—என்று அவர்களுக்கு அவ்வளவு அக்கரை!

அது போகட்டும் குமார்! பலமான பீடிகையைப்போட்டுவிட்டு, உன்னை வேறு திசைக்கு அழைத்துச் செல்ல நான் விரும்பவில்லை.

பி. சி. ஜியைப்பற்றிப் பேசிய 'ராஜாஜி' இந்த நாட்டு குழந்தைச் செல்வங்களைப் பற்றியும் சில நல்ல கருத்துக்களை அவரை அறியாமலேயே வெளியிட்டிருக்கிறார்.

"கோடிக்கணக்கான குழந்தைகள் உடலில் ஒரு கொடிய விஷத் திரவத்தை ஏற்றுவதற்கு சர்க்கார்முடிவுசெய்து,

# வெள்ளி புரிந்தவர் விஞ்ஞானம் பேசுகிறார்!

செகண்ட் ஒன்றிற்கு இருபத்து நான்கு டாலர் வருமானமுடைய சொத்துக்கு அதிபனாயிருந்த ஜார் மன்னன், சாகும்போது பிச்சைக்காரனாகச் செத்தான்!

அவ்வளவு ஏன்? மலையாளத்திலே ஒரு மந்திரியார்—பதவியிலிருந்தபோதே 'பத்து லட்சங்களை'ச் சுருட்டிக் கொள்ளத் தவறிவிட்ட அப்பாவி மனிதர்! அரசவையில் இருந்தபோது அக்ரமச் செயல்களின் கர்த்தாவாக இருந்தாராம், அவர்! பின்னர் ஒருநாள் 'பதவி தேவன்' அவரை உதைத்துத் தள்ளிவிட்டானாம். வெளியே செல்லக்கூட 'பஸ்'ஸை நம்பி வாழவேண்டிய நிலைமையாம்! அப்போது மக்கள் அவரை எந்த நிலையில் வரவேற்றார்கள், தெரியுமா?

"அதோ, கொடுங்கோலன் போகிறான், பார்!" — என்று 'கோட்'டைப் பிடித்து இழுப்பானாம், ஒருவன்!

"துப்பாக்கிக் குண்டுகளை எங்கள்மீது ஏவினையல்லவா? அதை அப்படியே இப்போது திருப்பித் தருகிறோம்!"—என்று சொல்லிக் கொண்டே 'மலைப் பிஞ்சு'களை அவர் முதுகிலே நடமாடச் செய்வார்களாம்!

—இப்படியெல்லாம் கதைமூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டவர்தான், திடகாத்திரமுள்ள சொற்போர் வீரனைப் போல இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாகவே பேசியிருக்கிறார். சரி; போகட்டும். இது பழைய கதை. இதோ விஷயத்துக்கு வருகிறேன்!


அந்தக் கூட்டத்துக்கு யார் ஏற்பாடு செய்தார்கள் என்பதை அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறாயா? இருக்க வேண்டியதுதான்! அன்புப் பெருக்கால்—அவருடைய அறிவுரையைக் கேட்டு அறவழி செல்லும் பெருமை நிறைப் பண்பால்—பொது மக்கள் கூட்டிய கூட்டத்தில்தான் இந்தியாவின் மாஜி கவர்னர் ஜெனரல் ஒரு பத்திரிகை நிருபர்கள் மகாநாடு கூட்டினார். அதை அவர் கூட்டியிராவிட்டால் நான் இப் பொதுக் கூட்டத்தில்பேசியிருக்கமாட்டேன்!"

—(சுதேசமித்திரன்)

—இப்படிப் பேசியிருக்கிறார், ஆச்சாரியார்!

'தமிழ் நாட்டிலே நான்இருக்கின்றேன்; சாகவில்லை' என்பதை அறிவித்துக் கொள்வதற்காக—'சுகாதார மந்திரி மகாநாடு கூட்டினார்! நான் இந்தப் பொதுக் கூட்டம் கூட்டுகிறேன்!'—என்கிற அளவிற்கு மாஜி கவர்னர் ஜெனரல் பேசியிருக்கிறார், பார்த்தாயா!

மாஜியாகிவிட்ட ஓமாந்தா




இயக்கமாக செய்ய விரும்புகின்றனர்... இது எதிர்காலத் தலைமுறையைப் பொருத்த விஷயம். குழந்தைகள் ஏழையாயிருப்பினும், அவர்கள் பெற்றோர்களுக்குச் 'செல்வங்கள்' அல்லவா? ஆகவே இது ஜாக்ரதையாக இருக்கவேண்டிய விஷயம்!"

—இப்படியெல்லாம் அவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

ஏழைகளாயிருந்தாலும், குழந்தைகள் அவர்கள் பெற்றோர்களுக்குச் செல்வங்களாம்! —இப்போதுதான் மாம்பலத்து முனிவருக்கு 'ஞானோதயம்' பிறந்திருக்கிறது!

எந்த ஆச்சாரியார் ஆட்சிபீடத்தில் இருந்தபோது குழந்தைகளைத் தூக்கி நிறுத்தி, அவர்களின் கொழுந்துத் தசைகள் இரத்தம் கக்கும் அளவுக்கு 'குலதர்மக் கல்வி' என்னும் கசையடிகளைப் பரிசாகத் தந்தாரோ, அவர்தான் இன்று சொல்கிறார் 'குழந்தைகள் செல்வம்'—என்று!

எந்தச் செல்வத்தை அவர் சேற்றிலே தூக்கி எறிந்தபோது தடுத்து நிறுத்திய நம்மை, மாம்பலத்து வீதிகளிலே

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 8—7—55 வெள்ளி

## குற்றாலத்தில் கூடியோருக்கு!

வடக்கே தொழிற் புரட்சி! தெற்கே வறண்ட காட்சி!

—என்று தென்னகத்தின் வீதிகள்தோறும் புள்ளி விபரங்கள் பல குவித்து, நம்மை எள்ளி நகையாடியோர் நாணுகிற அளவுக்கு அவைகளை எடுத்துக் காட்டினோம்.

வளம் அங்கே—கண்ணீர்க் குளம் இங்கே—

என்று தேய்பும் தெக்கணத்தின் சார்பாக தேசாந்திரம் போகும் வடநாட்டுத் தலைவர்களுக்கு எடுத்துரைத்தோம்!

மார்ச் 20 என்று தேதி குறித்து, திராவிடத்துக்கு திட்டம் வகுக்க நாதியில்லையா?—என்று இடிக்குரல் கொடுத்தோம்!

அப்போதெல்லாம் நம்மைத் தேற்ற வராதவர்கள் — 'தெற்கு புறக்கணிக்கப் படவில்லை' என்று ஆதாரங்காட்டி ஆறுதல் கூற அவகாசம் காணுதவர்கள்—இப்போதுதான் இழிநிலை உணர்ந்து இடித்துரைக்க முன்வந்திருக்கிறார்கள்.

அதிலேயும் ஒரு வேடிக்கை!

ஆவடி காங்கிரசிலே, தென்னாட்டிற்கு சரியான பங்கு வேண்டுமென்று அம்புஜம்மாள் மடியை விரித்தபோது;—

மத்ய சர்க்கார் மந்திரி நந்தா இங்கு வந்தபோது 'எங்களுக்கு வர வேண்டியது பாக்கியிருக்கிறதே' என்று சுப்ரமணியனார் தனக்கே உரிய பணிவன்புடன் பகர்ந்தபோது;—

'அவர்களு'டையதாய் இருந்த வடக்கு — தெற்குப் பிரச்னை, மார்ச் 20-ந் தேதி திராவிட முன்னேற்றக் கழகம் தட்டிய போர்முரசத்திற்குப் பிறகு திரும்பவும் 'நம்மிடமே' ஒப்படைக்கப் பட்டுவிட்டது.

தென்னகம் பாலையாகிறதே என்றோம். 'ஆமாம்; புல்லை நாம் வைக்க, பாலை அவர்கள்தான் கறந்து செல்கிறார்கள்' என்று சித்திரம் தீட்டியது 'மித்திரன்'!

கைத்திறன் கொண்ட தென்புலத்து வீரன் வாய்த்திறன் இல்லாத காரணத்தால் காய்ந்து சருகாகிறானே என்று புலம்பினோம். 'அப்படித்தான்; இதை நந்தாவிடமும் சொல்லியிருக்கிறேன்'—என்று செப்பினார் சுப்ரமணியனார்!

ஆனால் இந்த நிலை நீடிக்கவில்லை. மார்ச் 20-க்குப் பிறகு நாம் எழுப்பிய கண்டனக் குரல் விந்தியம் தாண்டி பாய்ந்திட்டபோது—பதவியிலமர்ந்தோர் தாங்கள் டெல்லியின் ஏஜண்டுகள் என்பதை உணர்ந்துகொண்டு, கம்மிய தொனியிலே நம்மைச் சமாதானம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்!

சங்கநாதம் கொடுத்த குரல் சரசமாடக் கிளம்பிவிட்டது!

ஜூன் 20-அன்று லால்குடியிலே பேசிய நிதி அமைச்சர் சுப்ரமணியம், "வடநாட்டுக்கு அதிக சலுகை காட்டப்படுவதாக எதிர் பிரசாரம் செய்து வருகின்றனர். வடக்கு, தெற்கு என்று ஏன் சர்ச்சை செய்ய வேண்டும்? வடக்கே போகாதவர்களும், பார்க்காதவர்களும்தான் இந்தத் துஷ்டப் பிரசாரம் செய்வார்கள்"

—என்பதாக உரத்த குரலிலே பேசினார்!

நலம் பல குவிக்கும் திட்டங்களிலே நல்லதொரு பங்கு நமக்கு வேண்டும் என்று நந்தாவிடம் நவின்றவர்தான்—சுதேசமித்திரன் சித்திரவடிவிலே அதைப் பதித்திருப்பதையும் மறந்துவிட்டு, இப்போது 'நந்துருணி' பேசுகிறார்!

மீண்டும் புள்ளி விபரமென்னும் அம்புராத்தூணி கொணர்ந்து, பள்ளி மாணவனுக்கு எடுத்துச் சொல்வதைப் போல நிதி அமைச்சருக்கும் பாடம் தரவேண்டிய வேலை நமக்கு ஏற்படவில்லை. இந்த கிழமை குற்றாலம் ராமநாதபுரம் அரண்மனையிலே கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அந்த வேலையைச் செய்துமுடித்து, உண்மைக்கு எதிர்க் கட்சியாடிய கொங்கு நாட்டாரின் முகத்திலே கரியையும் தடவியிருக்கிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் தீர்மானங்கள் சில தீட்டினார்கள்—அமைச்சர் சொல்வதை ஆதரித்தா? அல்ல! அல்ல!

அவர் 'துஷ்டப்பிரசாரம்' என்று திருநாமம் புனைந்தாரே, அதே துஷ்டப் பிரசாரத்துக்குத்தான் தீர்மான வடிவு கொடுத்திருக்கின்றனர்!

இதோ, தித்திக்கும் அந்தத் தீர்மானம்—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கவிருக்கும் பெரிய தொழில்கள், சனரகத் தொழில்கள்—ஆகியவற்றில் சிலவற்றை தமிழ் நாட்டில் ஸ்தாபிக்க வேண்டுமென்று மத்ய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

—பக்தவத்சலனார் பிரேரேபிக்க, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இதை ஆமோதித்திருக்கிறார்.

அரசாங்கத்தை நடத்துபவர்கள் அவர்கள்-அவர்களே அட்சய பாத்திரமேந்த வேண்டிய நிலை பிறந்திருக்கிறது!

இந்த இழிநிலைகூட நமக்கு சிரிப்பாக இல்லை—ஆனால் பெரிய தொழில் தென்னாட்டில் ஏற்படாமைக்கு டி. டி. கே. கூறிய காரணங்களும்—அதற்கான விளக்கமும்தான் வயிறு வெடிக்க வைக்கும் வன்மை வாய்ந்ததாயிருக்கிறது.

அவர் கூறினாராம்—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டைப் புறக்கணிப்பதாக எதிர்க் கட்சியினர் ஒரு வதந்தி கிளப்பியுள்ளனர். இது வீண் புரளிதான்!"

—இப்படி சரளி வரிசை பாடியிருக்கிறார் கிருஷ்ணமாச்சாரியார்!

தென்னாட்டைப் புறக்கணிப்பதாகக் கூறுவது புரளியாம்!

இருந்தாலும், அவர் பெரிய தொழில்களில் சிலவற்றை தென்னாட்டில் துவங்க வேண்டுமென்று தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்!

ஏன் இந்த முறண்பாடு?

தொழிற்சாலைகள் இங்கு அமைய வேண்டுமென்று கோரிக்கை கிளப்புவானேன்? பின் அதையே 'புரளி' என்று சொல்லி, புழுதி வாரி இரைப்பானேன்?

இந்த வேறுபாட்டிற்கு நம்மால் ஒரே ஒரு காரணம்தான் காட்ட முடியும்!

கிருஷ்ணமாச்சாரியார் தான் பிறந்த திசை தெற்கு என்பதை உணர்ந்திருக்கிறார். எனவேதான், தன்னையறியாமலேயே தீர்மானத்துக்கு ஆதரவுக் குரல் கொடுத்திருக்கிறார்!

அதே சமயத்தில் தான் ஒரு வடநாட்டு கங்காணி என்ற கருத்தும் அவர் நெஞ்சிலே பாய்ந்திருக்கிறது—உடனே அவர் சொன்னதை மறந்து நம்மீதும் பாய்ந்திருக்கிறார்!

—இதைத் தவிர கிருஷ்ணமாச்சாரியாரின் திடீர் லீலைகளுக்கு நம்மால் விளக்கம் தர முடியவில்லை.

மேலும், அவரது பேச்சு முழுதையும் ஊன்றிக் கவனித்தோர் அவரது திறமையையே சந்தேகிக்கும் அளவுக்கு கொண்டுவந்து நிறுத்தப் படுகின்றனர்.

தென்னகத்தில் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படாமைக்கு அவர் இரண்டு காரணங்கள் தருகிறார். (1) 'பெரிய தொழிலதிபர்கள்' இல்லையாம். (2) 'நிலக்கரி'யும் கிடையாதாம்!

நெய்வேலியை அருகிலே வைத்துக்கொண்டு—சென்ற கிழமை அங்கு செய்யப்படவேண்டிய பூர்வாங்க வேலைகளுக்காக அமெரிக்காவிடமிருந்து ஐந்து லட்சம் டாலர் உதவி கிடைக்குமென்று பெருமிதத்துடன் அறிவித்துவிட்டு—அதில் இந்திய அரசின் பங்கு நான்கு லட்சம் என்றும் கூறிக்கொண்டு-ஆமை வேகத்தில் ஆராய்ச்சி நடத்தும் அமைச்சர் ஒருவர்தான் பேசுகிறார், தென்னாட்டில் நிலக்கரி இல்லை என்று!

'நெய்வேலித் திட்டம் ஏட்டளவில் நிற்கிறதே! ஆண்டுகள் பல ஒழியும் எழுந்து நடமாடவில்லையே'—என்று நாம் கேட்கிறோம். அவரோ நிலக்கரியே இல்லை என்று சாதிக்க வருகிறார்!

குருடாகிவிட்ட கிருஷ்ணமாச்சாரியாருக்கு ஜூலை 4-ந் தேதிய 'சுதேச மித்திரன்' தலையங்கத்தின் ஒரு பகுதியைத்தான் காணிக்கையாக்க விரும்புகிறோம்;

"(நெய்வேலி நிலக்கரித் தொழிலில்) ஆரம்பத்தில் தயக்கம் காட்டப்பட்டதாயினும் சர்க்கார் வரவர இதில் கவனஞ் செலுத்த நேர்ந்தது. முடிவில் இந்திய சர்க்காரே இக் கனி வேலையை ஏற்றுக் கொண்டனர். இதன் விளைவாக இதில் காலதாமதமின்றி விசேஷ முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த நம்பிக்கை கைகூடவில்லை. பூர்வாங்கப் பரிசீலனையில் கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகக் காணவில்லை என ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது"—

—தென்னாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு நிலக்கரிச் சுரங்கத்தின் நிலைமை இதுதான்! நாம் சொல்லவில்லை-'அவாள்' ஏடே சுட்டிக் காட்டுகிறது, இப்படி!

நெய்வேலியிலே சூழ்ந்திருக்கும் வேகக்குறைவை போக்க முடியாதவர்தான், 'இங்கு நிலக்கரியே இல்லை'யென்று சொல்லி, நம்மை போருக்கு அழைக்கிறார்!

தென்னாட்டில் தொழிற்சாலைகள் பல அமையாமைக்கு அவர் இரண்டாவதாகக் கூறிய காரணம், இங்கு 'பெரிய தொழில்களுக்குத் தேவையான மூலதனம் போடக்கூடிய முதலாளிகள் இல்லை'யாம்! 'நிலச்சுவான்தார்கள்'தான் இருக்கிறார்களாம்!

உண்மை நிலை உரைத்துவிட்டார் டி. டி. கே! தென்னகத்தில் பெரிய முதலாளிகள் இல்லையாம்!

எங்கே ஒரு பகுதியில் தொழில் துவங்குவதற்கு முதலாளிகள் இல்லையோ, அந்தப் பகுதியில் அரசாங்கம் செய்ய வேண்டிய கடமை என்ன?

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# நாட்டிய கலா....

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

அப்போது அரண்மனை நட்டுவனாரும், மத்தளக்காரனும் வரவழைக்கப் படுவார்கள். அவளது ஆட்டத்திற்குத் தக்கபடி அவர்கள் தாளம் தட்டி மேளம் கொட்டுவார்கள். அவளாக அயர்ந்து, மயங்கி, கீழே விழுந்து, மூச்சு முழுமையும் அடங்கிய பிறகுதான் அவளை விடுவார்கள். இந்த மரண வேடிக்கையை மாளிகையிலிருந்தபடியே மன்னன் காணுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தீக் காயங்களோடு கூடிய அந்த அழகியின் சவத்தை தலைநகரின் மத்தியிலே நாலு நாளைக்குக் கட்டித் தொங்கவிடுவார்கள்! காக்கைகளும், கழுகுகளும் அவள் உடலைக் கொத்திப் பிராண்டிக் களிப்புற அனுமதி தரப்படும். ஐந்தாம் நாள் அந்த உடல் கடலிலே எறியப்படும்.

இப்படி அறிவிக்கப்பட்ட தண்டனையை ஏற்றுக் கொண்டு, அந்தத் தங்கம் நிகர் மேனியாள்—தணல் காட்டுக்கு அருகிலே நின்று கொண்டிருந்தாள்.

இத்தனைக்கும் அந்த ஏந்திழையாள் செய்த குற்றந்தான் என்ன? யாருக்கு என்ன தீங்கிழைத்தாள்? அரசு சீறுமளவுக்கு—அக்கினி தழுவுமளவுக்கு—அந்த ஆரணங்கு புரிந்த ஆபத்தான செயல்தான் யாது? வேற்று நாட்டுக்கு வேவுக்காரியாக மாறினாளா? சுதந்திர பூமியை அடிமையாக்க உதவும் சூன்யக்காரியாக உலவினாளா? கொலை செய்தாளா? கற்பு நிலை குலைந்து கருவைச் சிதைத்தாளா? வீதியிலே போவோர்க்கு விழி காட்டி, 'இன்பபுரிக்கு வழிகாட்டுவேன் வாரீர்' என்று வலுவிலே அழைத்தாளா? இல்லை; இல்லை. அவள் செய்த குற்றம் மேற்கூறிய எதுவுமில்லை!

அவள் யார்? அங்கேன் நிறுத்தப்பட்டிருக்கிறாள்?

★

அவள் ஒரு நடனக்காரி! கோமேதகம் அவள் பெயர்!

அவள் பாதம் பட்டால் பாபம் தொலையும் என்பார்கள், பரத நாட்டியத்தோடு பக்தியைக் குழைத்துப் பேசும் பாகவத சிரோன்மணிகள். காற்றிலாடும் முல்லைக்கொடியோ — கான மயிலோ-என இன்ப ஊற்றிலெழும் வார்த்தைகளைக் கொட்டிக் கொட்டி வர்ணிப்பர் வாலிபக் காளைகள்!

விழியோ—வேற்படையோ?
மொழியோ—முக்கனியோ?
இடையோ — இருபிறை வடிவோ?

இப்படிப் புகழ் பாடும் புலவர்க் கூட்டம்!

காலிலே சதங்கை கொஞ்சும்—காண வந்த சபையோரின் கண்கள் கெஞ்சும்! கடைவிழி காட்டுவாள்—'காமன்' படையுடன் மோதுகிறான் எனக் கதறுவர் காளையர்!

விரல் நெளியும்-வீரர் தம் தோள்கள் வளையும்! சுற்றிச் சுழன்றாடுவாள் பம்பரம் போல—சூறைக் காற்றில் பஞ்சானேம் எனப் பரிதவிப்பர் பருவ இளைஞர்!

★

கோமேதகம் — ஆழிநாட்டுக்கு அழகு வழங்கும் கோமளவல்லி! அந்த தேசத்து அதிசயங்களிலே அவளும் ஒன்றானாள். தேச முழுதுமுள்ள நடன அரங்கங்களிலே அப்சரஸ்-ஆடலரசி - அழகுராணி என்பன போன்ற பட்டங்களைப் பெற்று, நாட்டியத்திற்கோர் ஒளி விளக்காகத் திகழ்ந்தாள். கவிவாணர்-கலைவாணர்---மதிவாணர் கூடிய மாமன்றங்களிலே அந்த வேல்விழியாள் பெற்ற விருதுகள் ஏராளம். தேசத்தின் அழகுப் பொக்கிஷம் - கலைப்பேழை - என்றெல்லாம் போற்றப்பட்ட அந்தப் பொற்கொடியாள்தான் நெருப்புக் குழிக்குப் பக்கத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறாள். ஏன்?

அவள் ஒரு துறவியைக் கெடுத்துவிட்டாள். உலக மக்களுக்கு நல்லுபதேசம் செய்யும் ஒரு இளந்துறவிக்கு மையல் மூட்டி, தன் மஞ்சத்து அடிமையாக ஆக்கிவிட்டாள். இது பெரிய குற்றமென தீர்ப்பளித்தான் மன்னன். மன்னனின் வழக்கு மன்றத்திலே இது மிகப் புதுமையான வழக்கு. இதுவரையிலே இப்படி ஒரு வழக்கை அந்த மன்றம் சந்தித்ததில்லை. இது போன்ற சாயல் உள்ள வேறு வழக்குகள் கூட வந்தது கிடையாது! இதை விடப் பெரிய வழக்குகளிலே வழங்கப்பட்ட தீர்ப்புகள்கூட இந்த அளவுக்குக் கடுமையாகவும் கோரமாகவும் இருந்ததில்லை.

ஆழிநாட்டு மக்களும், ஆத்தானத்து அலுவலர்களும் ஆச்சரியப்பட்டார்கள். அரசன், இது போன்ற கொடுமையான தண்டனை யாருக்கும் அளித்தது கிடையாதே; கோமேதகத்திற்குமட்டும் அளித்தது ஏன்?-என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கலையரசியின் பரிதாப முடிவுகேட்டு நெஞ்சு திடுக்கிட்ட கலைத்துறை விற்பன்னர்கள் பலரும் கருணை மனு சமர்ப்பித்து, காவலனின் கட்டளையைத் தளர்த்துமாறு வேண்டினர். எதுவும் வேந்தனின் காதிலே விழவில்லை!

'நிறைவேற்றுங்கள் உத்திரவை' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். அந்தக் காட்சியைக் காண்பதற்கும் மாளிகை உச்சிக்கு வந்துவிட்டான்.

★

அன்று, கொலுமண்டபத்திலே கோமேதகத்தின் நடனம் முதன் முதலாக நடைபெற்றது.

கோமேதகம் என்றொருத்தி இருக்கிறாள்; ஆட்டத்திலே அவளை ஜெயிக்க அவனியிலே யாருமில்லை; என்று அரண்மனை மனிதர் அனைவரும் பேசினர். அரசன் இதைக் கேட்டான். 'அழைத்து வருக கொலு மண்டபத்திற்கு, என்றான். வந்தாள். ஆடினாள். மன்னன் மார்பிலே புரண்ட மரகத மணி மாலை-இதுவரை யாரும் பெறாத அற்புதப் பரிசு—அதை அவளுக்கு அளித்தான். 'நாட்டிய கலாராணி' என்ற பட்டமும் சூட்டினான். 'நான் பெற்ற பேறு இது' என நன்றி தெரிவித்து நகை முழக்கினாள். கொற்றவன் குதூகலித்தான். கோமேதகம்—கோமேதகம்—மந்திரம் போல் உச்சரித்தான், அந்தப் பெயரை! அவள் விடை பெற்றாள். அரண்மனையிலிருந்து அழகே விடை பெறுவது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது அரசனுக்கு!

இரவெல்லாம் விழித்துக் கிடந்தான். கோமேதகம் அவனைக் கொள்ளை கொண்டு விட்டாள்! ராஜ்ய காரியங்களையும் பார்க்க அவனுக்குப் பிடிக்கவில்லை. மகனைக் கூப்பிட்டான். "இளவரசா! இன்று முதல் சில நாட்களுக்கு ராஜ்ய விஷயங்களை கவனித்துக் கொள்! எனக்கு ஓய்வு தேவை!" என்று கூறினான்.

இளவரசன் இன்பசாகரன் சம்மதம் தந்தான். சாம்ராஜ்ய அலுவல்களிலே ஈடுபட்டான்.

கோமேதகத்தை எப்படியும் சந்திக்க வேண்டும்; என்னைக் கொல்லாமல் கொல்லும் அவள் விழிகளிலே முத்தமாரி பொழிய வேண்டும்; அதற்கு வழி? மன்னன் யோசித்தான்-யோசித்தான்—ஒரு வழியும் புலப்படவில்லை!

★

கோல நிலா வந்து கொஞ்சுகின்ற இரவு—கோமேதகம் தன் நீலக் குறுநயனங்களை மூடி நித்திரை பூமிக்குப் பயணம் நடத்திக் கொண்டிருந்தாள். வாயிற்கதவு தட்டப்படும் ஒலி. எழுந்தாள். கதவைத் திறந்தாள். எதிரே அரசன் நின்று கொண்டிருந்தான்.

"அரசே!"

"கோமேதகம்!"

"எங்கே இந் நேரத்தில்?"

"நகர் சோதனைக்கு வந்தேன்-நீ நலமாயிருக்கிறாயா என்று விசா

★ தொடர்ச்சி 9-ம் பக்கம்

## ராஜோபசாரம்!

"என்றென்றும் மறக்க முடியாத தம்முடைய சோவியத் விஜயத்தில், சென்ற விடமெல்லாம் பிரதமர் நேருவிற்கு மாண்பு மிக்க ராஜோபசார வரவேற்புகள் கிடைத்தன"—

*என்று கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக் காரியதரிசி அஜாய் கோஷ் கூறினார்.*

— 'ஜனசக்தி' 3—7—55

## ★ மகாபாரதம் - [தொடர் சித்திரம்] - 13 ★



## ஜிப்பியுடன் பேட்டி :




சென்னையிலே தயாராகும் சினிமாப் படமொன்றில் நடிப்பதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த ஹாலிவுட்டிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கும் **ஜிப்பி** என்ற மனிதக் குரங்கை சென்ற கிழமை நமது **'கற்பனை நிருபர்'** பேட்டி கண்டார். அப்போது நடந்த சுவையான பேச்சுகளின் சாரமே கீழே தரப்பட்டிருக்கிறது.

# குரங்கு நடிகர் கூறும் உண்மைகள் !

நானும் என்னுடைய சகோதர பத்திரிகை நிருபர்களும் மீனம்பாக்கம் விமான நிலையத்திலேயே மிஸ்டர் ஜிப்பியை வரவேற்கக் கூடியிருந்தோம். அன்றையதினம் மீனம்பாக்கம் நிலையத்தில் காஞ்சிபுரம்கருடசேர்வைக்கும் —தில்லை ஆருத்ரா தரிசனத்திற்கும் இல்லாத ஜனத்திரள் கூடியிருந்தது. வங்காளக்குடாக் கடல் எப்படி இங்கு வந்தது என்றுகூட ஆச்சரியமடைந்துவிட்டேன். எனது பக்கத்திலே நின்றுகொண்டிருந்த ஒரு தேசியப் பத்திரிகை நிருபர், "பார்த்தேளா சார், ஒருகுரங்கு செய்ற வேலையை! ஆவடி காங்கிரஸ் மகாசபையிலேகூட இவ்வளவு பேர் கூடலியே சார்!"—என்று சொல்லிக் கொண்டே ஒரு 'சிமிட்டா' அம்பாள் பட்டணம் பொடியை மூக்குக்குள்ளே வழியனுப்பி வைத்தார்.

இந்த நேரத்திலேதான் ஆகாய விமானம் தரை தட்டியது. சுற்றியிருந்த மக்களிடையே ஒரு பரபரப்பும், புத்துணர்ச்சியும் தாண்டவமாடிற்று!

தித்திப்பான செய்தி வழங்குவதில் சிறப்புபெற்ற **'தினப்பூந்தி'**யின் நிருபர் சிரித்துக்கொண்டே, "இந்த நிகழ்ச்சிக்கு என்ன சார் தலைப்புக் கொடுக்கலாம்?"—என்று கேட்டார். அதற்குள் விஞ்ஞான உலகையே ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருக்கும் **'கலக்கி'** பத்திரிகையைச் சார்ந்தவர், 'அனுமார் விஜயமென்றுபோஷா போடலாமே சார்! அதோ, பாருங்கோண்ணு! ஜிப்பி பறந்து வர்ற வேடிக்கையை! இந்தக் குரங்கு விமானத்திலே பறந்து வருது — அன்னைக்கு ஸ்ரீமத் அனுமான் விமானமில்லாமலேயே பறந்தான். இந்தச் சின்ன வித்யாசங்கூட புரியறதேயில்லே, இந்த நாஸ்தீகப் பசங்களுக்கு!"—என்று சொல்லியபடியே வாயிலிருந்து கீழே கொட்டிக்கொண்டிருந்த வெற்றிலைப் பாக்கு எச்சலை வழித்துவிட்டுக்கொண்டார்.

ஆஹா! அதோ வந்துவிட்டார், ஜிப்பி!

இராம தூதனைப் போல அவர் நெற்றியிலே நாமமில்லை. சூட்டும், ஹேட்டும் அணிந்து 'குஷி'யாக எல்லோருக்கும் சலாம் செய்தார்!

அவசரக்காரர் ஒருவர் ஜிப்பியின் முன்னே ஒரு 'மைக்'கைக் கொண்டுவந்து நிறுத்தினார். ஜிப்பி தன் நெற்றியிலே வழிந்த வியர்வையை வழித்தெறிந்துவிட்டு பேச ஆரம்பித்தார்:

லேடீஸ் அன்ட் ஜெண்டில்மென்...(அவர் ஆங்கிலத்தில்தான் பேசினார். அதை நான் அப்படியே தமிழில் தருகிறேன்)......என்னைப் பார்த்து பரவசமடைய ஏகாதசியன்று ஸ்ரீரங்கத்தில் கூடியிருப்பதைப் போல கூடியிருக்கிறீர்கள். ரஷ்யாவுக்கு நேரு விஜயம் செய்திருந்தபோதுகூட எனக்குக் கூடியதுபோல இவ்வளவு பெருந்திரளான மக்கள் சேர்ந்திருக்கமாட்டார்களென்றே நினைக்கிறேன்...(ஒரே கைதட்டல்!)... எனக்கு பாரத நாடென்றாலே ஒரே பிரியம். அதுவும் தமிழ்நாடென்றால் எனக்கு தேங்காய் மூடிபோல! என்னையும் என் முதாதையினரையும் தெய்வாம்சமாக்கிய புலவர் சிகாமணிகள் தோன்றிய தேசமல்லவா, இது! எனவே மீண்டும் உங்களுக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்."

—இதுதான் அன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சிகள். பிறகு இரண்டு தினங்களுக்கு முன்பு மிஸ்டர் ஜிப்பியை அவருக்காக பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட 'ஏர் கண்டிஷண்ட்' ரூமில் பேட்டி கண்டேன். இந்தியாவுக்கு வந்ததும் பாரத நாட்டு கலாச்சாரத்தை ஒட்டி அவர் கதர்க் குல்லாய் சகிதம் காட்சிதந்தார். இந்திய பாணியிலேயே அவர் **'நமஸ்தே'** என்று கூறியதோடு—'ராமாரே ராமா' என்றும் சொல்லி என்னை வரவேற்றதும் நான் திடுக்கிட்டுவிட்டேன். 'ராமாரே ராமா'! என்பது குரங்கு மொழியில் 'சலாம் மாலேகும்' என்பதற்குச் சமமான வாசகம் போலும்!

**நான்:** உங்களுக்கு தமிழ் தெரியுமா?

**ஜிப்பி:** ஓ! நன்றாகத் தெரியுமே! ஒரு தமிழ் வித்வானை வைத்துக் கொண்டு இப்போது நான் கம்பராமாயணம் படித்து வருகிறேன்.

**நான்:** அப்படியானால் விமான நிலையத்தில் நீங்கள் ஏன் ஆங்கிலத்தில் பேசினீர்கள்?

**ஜிப்:** ஓ, அதுவா? உங்கள் பிரதமர் நேரு மாஸ்கோவில் இறங்கியதும் என்ன பாஷையில் பேசினார் தெரியுமா? எப்போதும், எங்கும் ஆங்கிலத்தில் பேசும் அவர், முதன் முறையாக வெளிநாட்டில் இந்துஸ்தானியில் பேசினார். பிறகு அதை ஒருவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தாராம். அதே முறையைப் பின்பற்றித்தான் நான் தமிழில் பேசாமல் ஆங்கிலத்திலேயே பேசினேன்.

**நான்:** எங்கள் பிரதமர் பாணியைப் பின்பற்றி பாரத மக்களைக் கௌரவப் படுத்தியமைக்காக ரொம்ப மகிழ்ச்சி! உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?

**ஜிப்:** இல்லை.

**நான்:** திருமணம் செய்து கொள்ளும் உத்தேசமாவது உண்டா?

**ஜிப்:** அதுவும் இல்லை. ஏனென்றால் வெளிநாடுகளிலேயே வாழ்நாளையெல்லாம் கழிப்பவர்கள் பொதுவாகத் திருமணம் செய்துகொள்வது கிடையாது. உதாரணமாக கிருஷ்ண மேனனையெடுத்துக் கொள்ளுங்களேன். அவர் இன்னும்பிரம்மசாரியாகத்தான் இருக்கிறார். அவ்வளவு ஏன்? இந்தியாவுக்கு அப்பாலேயே வாழ்ந்து வரும் விஜயலட்சுமி பண்டிட்கூட இன்னும்மறுமணம் செய்து கொள்ளவில்லையே! அதைப்போலத்தான் நானும்...

**நான்:** சபாஷ்! அருமையான விளக்கம்!...இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**ஜிப்:** நல்ல கேள்வி! நான் அமெரிக்காவைச் சார்ந்தவனாக இருந்தபோதும்கூட நான் இந்தியக் கம்யூனிஸ்ட்களை முழு மனதோடு ஆதரிக்கிறேன்! ஏனென்று கேட்கிறீர்களா? உலகத்திலேயே இந்த நாட்டில்தான் கம்யூனிஸ்ட்கள் கம்பராமாயணம் படித்து, என்போன்ற குரங்கினத்தைக் கௌரவப் படுத்துகிறார்கள். என் இனத்துக்கு வந்திருக்கும் பெருமையை நான் உதறித் தள்ளலாமா? அதனால்தான் நான் அவர்களுக்குப் புகழ் மாலை சூடுகிறேன்.

**நான்:** புகழ் மாலையா? உங்களுக்குத்தான் மாலையென்றால் பிடிக்காதே!

**ஜிப்:** மன்னிக்கவும். 'புகழ் நாரை' சூடுகிறேன். நாளை மறுநாள் இது சம்மந்தமாக நான், தோழர் ஜீவானந்தத்தைச் சந்தித்து, அவருடைய கம்பராமாயணப் பிரசங்கத்துக்கு என்னுடைய பரிபூரண ஆதரவு இருக்குமென்பதைத் தெரிவிக்கப் போகிறேன்.

**நான்:** சபாஷ்! நீங்கள் அமெரிக்கனாயிருந்தாலும் உங்களுக்கு பரந்த நோக்கமும், விசால அறிவும் இருக்கிறது. உம்...தாங்கள் சென்னைக்கு வந்து இதுவரை ஏறக்குறைய ஒரு வாரத்துக்கு மேல் ஆகிறதே; அதற்குள் சென்னைப் பிரமுகர்கள் யாரையாவது சந்தித்தீர்களா?

**ஜிப்:** ஆமாம். சென்னை வந்தவுடனேயேமாம்பலத்துக்குச் சென்று மிஸ்டர் ஆச்சாரியாரைச் சந்தித்தேன். 'சக்கரவர்த்தி திருமகன்' எழுதி, என் போன்றவர்களைக் கௌரவப்படுத்தியதற்காக அவருக்கு ஒரு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, "இருபதாம் நூற்றாண்டின் அனுமந்தராயன்" என்னும் பட்டப் பெயரையும் பெற்றேன். அடுத்தபடியாக மந்திரி ராம

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்




## 30.
## ஆற்றோரம்!

அத்தானும், கிழவருந்தான் வருகிறார்களோ என்று ஆவலோடு நோக்கிய பரிமளா, துக்காராமையும், வெள்ளியம்பலத்தையும் கண்டு நடுங்கினாள். துக்காராமுக்கோ, ஆனந்தம் தாங்கவில்லை. வெள்ளியம்பலத்தின் கையிலே சிக்கி, எவ்வளவு பெரிய ஆபத்திலே அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்து, துக்காராம் குதித்தான். "பரிமளா! நீயா? இங்கே எப்படி வந்தாய், என் அன்பே!" என்று கத்தினான். அவனது சரச மொழிகளை மறுத்துப் பேசும் தைரியம் பரிமளாவுக்கு வரவில்லை. அன்றிரவு மனோராவிலே நடந்தவைகளை அவள் மறந்துவிடவில்லை.

தூக்கத்திலேயிருந்த தன்னைத் தூக்கிக்கொண்டு வந்து மனோராவிலே வெள்ளியப்பலம் பயமுறுத்தியதும், காதலனின் பெயரைச் சொல் என்று கட்டளையிட்டதும், கனல் விழி காட்டியதும், காதலன் பெயர் 'துக்காராம்' என்றுதான் தந்திரமாகப் பொய் கூறியதும், அவள் நினைவிலே அடுக்கடுக்காக வந்தன.

'காதலன் துக்காராம்' என்று வெள்ளியம்பலத்திடம் சொல்லிவிட்டு, இப்போது துக்காராமைப் பார்த்து, "தூ, போடா தூர!" என்று துடுக்கு மொழி கூறினால், அம்பலத்திடம் கூறிய பொய் அம்பலமாகிவிடுமே என்று பயந்தாள். அதனால் துக்காராமை அவள் அன்போடு நோக்க வேண்டியதாயிற்று.

"நீங்கள் இந்நேரத்தில் எங்கேயிருந்து வருகிறீர்கள்?" என்று அவனைப் பார்த்துக் கேட்டாள். "நானா? நான்... நான்..." என்று அவன் இழுத்தான். பற்களெல்லாம் வெளியே தெரியும்படி இளித்தான். வெள்ளியம்பலத்தின் நிலைமையும் இப்போது நெருக்கடியாகத்தான் போய்விட்டது. புதையலைக் கண்டுபிடிப்பதற்காகவே துக்காராமைப் பயன்படுத்துகிறோம் என்ற ரகசியம் பரிமளாவுக்குத் தெரிந்துவிடக் கூடாதே—தெரிந்தால் விஷயம் ஊரெங்கும் பரவிவிடுமே என்று அஞ்சினார் அவர்!

பரிமளா அந்த நேரத்தில் அங்கு வரவேண்டிய காரணமும் அவருக்குப் புரியவில்லை. அதைத் தெரிந்துகொள்ள விரும்பி, "நீ எப்படி பரிமளா இங்கு வந்தாய், இந்நேரத்தில்?" என்று கேட்டார்.

"எழுவானுக்குப் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை மூக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

"தெரியாதா உங்களுக்கு?—அன்றிரவு வீட்டிலிருந்து வந்தேனே..."

இதை அவள் சொல்லி முடிப்பதற்குள், "ஒகோ, சரி! சரி!" என்று உரக்கக் கூவி அவள் பேச்சை நிறுத்தினார் வெள்ளியம்பலம். எங்கே, அவள் விஷயம் முழுவதையும் துக்காராமிடம் கூறிவிடுவாளோ என்ற அச்சம் அவருக்குப் பிறந்தது. அதனால் அதற்கு மேல் அவளை அவர் பேசவிடவில்லை.

துக்காராம் சும்மாயிருப்பானா?

"ஏன் பரிமளா, என்னை சிவன்கோயில் பக்கம் வரச் சொல்லிவிட்டு, வராமல் இருந்துவிட்டாய்?" என்று ஆவலோடு கேட்டான். பரிமளாவுக்கு அந்தக் கேள்வி புரியவில்லை-விழித்தாள்!

"என்னா-தெரியாது மாதிரி விழிக்கிறே? இவரு வேலைக்காரன் ராமனிடம் சொல்லி அனுப்பினாயா-இல்லையா?"

பரிமளா, இப்போது அதிகமாகவே திகைத்தாள். நிலைமை முற்றிவிடக் கூடாதே என்று எண்ணிய வெள்ளியம்பலம்,

"சரி - சரி – கதையெல்லாம் அப்புறம் பேசுவோம். முதல்ல நடக்க வேண்டிய காரியத்தை கவனிப்போம்!" என்று தீர்மானமாகப் பேசினார்.

"இருங்க! ரொம்ப நாளைக்குப் பிறகு, காதலர்கள் சந்தித்திருக்கிறோம். பேசக்கூட விடமாட்டேங்கிறீர்களே!"

துக்காராம் கோபித்துக் கொண்டான்.

"என்னுடைய காரியத்தை முடித்துவிட்டு, பிறகு வருஷக் கணக்கில் பேசுங்களேன். யார் வேண்டாமென்றது?"

"உங்க காரியத்தை காலையிலே முடிக்கலாமே"

"அதெல்லாம் முடியாது தம்பி! இப்போதே முடிக்க வேண்டும்"

"மாட்டேன்-என்ன செய்வீர்?"-துக்காராம், தனக்கு ஒரு துணையிருக்கிறது என்ற தைரியத்தில் இப்படிப் பேசினான். உள்ளபடியே, பரிமளா அவனை நேசிப்பதாக இவ்வளவுக்குப் பிறகும் அவன் நம்பினான்—பாபம்! பட்டுக்கோட்டையிலே வெள்ளியம்பலம் தன்னை சந்தித்தபோது, பரிமளா தன்னைக் காதலிப்பதாக எண்ணியதே பைத்தியக்காரத்தனம் —அதன் பிறகு மருங்கப்பள்ளம் கிராமத்திலே ராமதூதன் வந்து கூறியது கேட்டு கூத்தாடியது அதைவிட பைத்தியக்காரத்தனம்-புதையல் ரகசியம் அறிவதற்காக, பரிமளா பெயரை உபயோகப்படுத்தி, தன்னை ஏமாற்றிவிட்டார் வெள்ளியம்பலம் என்ற முடிவுக்கு வந்தவன், இப்போது நேரே அவளைக் கண்டதும், அவளைத் தன் காதலியாகவே எண்ணிக் கொண்டது இணையில்லாத பைத்தியக்காரத்தனம். தனக்கும் அவளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை--எந்தவிதமான பேச்சுமில்லை-காதல் கடிதப் போக்குவரத்தும் ஏற்பட்டதில்லை- கண்ஜாடைகூட இருந்ததில்லை — அப்படியிருந்தும், ஆயுளுக்கே முடிவு தேடும் ஆபத்து அவள் பெயரால் வந்தும்–அவன் காதல் போதையிலே தடுமாறினான்.

பளபளப்பான கத்தி, வெள்ளியம்பலத்தின் இடுப்பிலே இருக்கிறது என்பதை மறந்து அவரை எதிர்த்துப் பேசினான்-'மாட்டேன்! முடியாது!' என்றெல்லாம்!

வெள்ளியம்பலத்திற்கு ஆத்திரம் பொங்கியது. ஒரே குத்தாகக் குத்தி அவனைக்கொன்றுவிடக்கூட நினைத்தார். அந்த நினைப்பை 'புதையல்' தடுத்தது. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டார்.

"சரிதான் தம்பி-வா! நம்ப வேலையை முடிச்சுட்டா, அப்புறம் நிம்மதியா இருக்கலாம் பாரு!"

இவர்கள் எதைப் பற்றி பேசிக் கொள்கிறார்கள் என்று பரிமளாவுக்குப் புரியவில்லை. அவள் அத்தானையும், கிழவரையும் நினைத்து நினைத்து ஏங்கினாள். இடையிலே முரடனும், முட்டாளும் குறுக்கிட்டுவிட்டார்களே என்று மனம் புழுங்கினாள். அவர்களிடமிருந்து எப்படித் தப்புவது என யோசித்தாள்.

"நீங்களிருவரும் போய் உங்கள் வேலையைக் கவனித்துவிட்டு வாருங்களேன். நான் இங்கேயே இருக்கிறேன்" என்று கூறிப் பார்த்தாள்.

"அதுவே சரி! நீ இங்கேயே இரு. நாங்கள் இதோ வந்துவிடுகிறோம்" என்று கிளம்பினார், வெள்ளியம்பலம். துக்காராமுக்கோ அதில் இஷ்டமில்லை. ஏனெனில் அவனுக்கு உயிர்விட இஷ்டமில்லை; அதனால்தான்! பரிமளாவிடம் விஷயத்தைக்கூறிவிட எண்ணினான்.

"பரிமளா! — வேலையொன்றும் பிரமாதமில்லை. புதையல் ரகசியம் ஒரு சாமியாரிடமிருக்கிறது..." என்று துவங்கினான். அதற்குள் வெள்ளியம்பலம் தாண்டிக் குதித்து, "சொல்லாதே — போதும் நிறுத்து!" என்று கத்தினார்.

"அட இருங்கய்யா! என் காதலியிடம் சொன்னல் தப்பு ஒன்றுமில்லே. புதையலே, ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறேம். அதில், என் பாதியை நானும் என் காதலி பரிமளா வுந்தானே அனுபவிக்க வேண்டும்!"

"அதை வேண்டாமென்று நான் சொல்லவில்லேயப்பா! பாதிப் புதையலே பரிமளாவும் நீயும் தாராளமாக அனுபவியுங்கள். அதற்காக அந்த ரகசியத்தை அவளிடம் சொல்லவேண்டுமா என்ன?"

"என் காதலிக்குத் தெரியாத ரகசியமா?"

"புதையல் விஷயம் உன் காதலிக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். நீ அவளிடம் சொன்னதை நான் கேட்டதால்தானே இவ்வளவு தூரம் நிலைமையே வளர்ந்திருக்கிறது!"

ஏதோ புதிய ரகசியம் தெளிவாகலாம் என எண்ணிய பரிமளா, ஒரு கேள்வி கேட்டு வைத்தாள், "எனக்கு அது எப்படித் தெரியும்?" என்று!

உடனே வெள்ளிபம்பலம், "சும்மா இரு, பெண்ணு. சிவன் கோயிலிலே நீயும் துக்காராமும் பேசிக்கொண்டதை இந்தக் காதால கேட்டேன். "மாமரத் தடியிலேதான் தங்கம் புதைக்கப்பட்டது" என்று துக்காராம் சொன்னுரு. இல்லேயா?" என்று கேட்டுவிட்டு அலட்சியமாக சிரித்தார்.

பரிமளாவுக்கு இப்போது எல்லாம் விளங்கிவிட்டது. துரையின் தங்கை தங்கம் புதைக்கப்பட்ட சோகக் கதையை துரை தன்னிடம் சொன்னதை, வெள்ளியம்பலம் கேட்டு, இப்படி விபரீத அர்த்தம் செய்து கொண்டிருக்கிருர் என்று தெரிந்துகொண்டு, தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டாள் — அந்தக் கவலே தோய்ந்த நேரத்திலுங்கூட.

"நானும் இவரும் அப்படியொன்றும் பேசிக் கொள்ளவில்லேயே—ஒருவேளே கனவு கண்டீர்களோ, என்னமோ?" என்று பரிமளா கூறிய பிறகு தான் துக்காராமுக்கு உயிரே வந்தது. இல்லாவிட்டால், தங்கம் பற்றிய சம்பாஷணையை, பரிமளா வேறு யாருடனே பேசியிருக்கிருள் என்று எண்ணி மனதைப் புண்ணுக்கிக் கொண்டு தவித்திருப்பான், அந்த அப்பாவி வாலிபன்!

"அதெல்லாம் போகட்டும்-ஆகவேண்டியதை கவனிக்கலாம். துக்காராம்! உம்....புறப்படு!" என்ருர் வெள்ளியம்பலம்.

"எங்கே?" என்ருள் பரிமளம்.


"அதை உனக்குச் சொல்லக் கூடாது. தங்கம் எடுக்கிற ரகசியத்தை வாங்குவதற்குப் போகிறேம்!"—இது வெள்ளியம்பலம்.

"தங்கம் இருக்கிற இடம் தெரியலாம்; எடுக்கிற ரகசியம் தெரியக்கூடாதா?" என்று சிணுங்குவதுபோல நடித்தாள் அவள்.

"உன்னிடம் சொல்லாமலா கண்ணே! இப்போதே சொல்கிறேன்!...அதாவது...ஒரு சாமியாரிடம்..." என்ருன் துக்காராம்.

"சரி-சரி! புறப்படலாம்!" என்று கொஞ்சம் பலத்த குரலிலே கூறினர் வெள்ளியம்பலம். புறப்பட்டு என்ன செய்வது; பொழுது விடிய இன்னும் நேரமிருக்கிறதே! விடிந்தால் அல்லவா, வெள்ளியம்பலத்திடமிருந்து விடுபட முடியும்-என ஏங்கினுன் அவன்.

துக்காராமின் பிடிவாதத்தைக் கண்ட வெள்ளியம்பலம் இடையிலே சொருகியிருந்த கத்தியைக் கையிலே எடுத்துக் கொண்டார்.



அதை கவனித்த துக்காராம், திடுக்கிட்டான். உயிரைப் பற்றிய ஆசை படையெடுத்தது அவன் உள்ளத்தில்!

"பரிமளாவும் என்னேடு வர வேண்டும்" என்று ஒரு நிபந்தனே போட்டான். அவளாவது வழியில் தன்னேக் காப்பாற்றமாட்டாளா என்ற நம்பிக்கையில்தான் அவன் அந்த நிபந்தனே விதித்தான்.

"எல்லோருமே போகலாம். ம்—நீ முதலில் நட! பரிமளா—நீயும் புறப்படு!" என்று அதட்டினுர் அந்தப் பொன்னுக்கு வீங்கி!

பரிமளாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லே. போலீசாரிடமிருந்து தப்பி, இந்தப் புதையல் தேடியின் கையில் அகப்பட்டு விட்டோமே என்று கவலேப் பட்டாள். வாடினுள். வழி? எதுவுமில்லே! எதிரே ஆறு! அதிலும் ஆழமில்லே. அகலம்தான் அதிகம்—விழுந்தாலும் சாக முடியாது. எது வரினும் வரட்டும் என்ற உள்ள உரத்தோடு அவர்களுடன் புறப்பட்டாள். வெள்ளியம்பலமோ, புதையலே நாளேக்கு எடுத்து விடலாம் என்ற நம்பிக்கையோடு நடை போட்டார். துக்காராமோ, தன் உயிர் மதில் மேல் பூனேயாக இருக்கிறது என்ற முடிவோடு முன்னே நடந்தான்.

ஆற்றின் கரையோரமாகவே மூவரும் நடந்துகொண்டிருந்தார்கள்.

"அந்த எடந்தான் எது என்று குறிப்பிட்டு சொல்லேனப்பா-நானுவது கண்டுபிடிக்கிறேன்" என்று கால் வலியோடு கேட்டார் வெள்ளியம்பலம்.

"அவர் இருக்குமிடத்தை, பார்த்துத்தான் கண்டுபிடிக்க முடியும். சொல்ல முடியாது—சொல்லவும் தெரியாது!" என்று கூறி நடந்துகொண்டிருந்தான் துக்காராம்.

ஆற்றங்கரை யோரத்திலே உள்ள புல் பூண்டுகளே மிதித்துக்கொண்டும், முட்களே சமாளித்துக் கொண்டும், பரிமளா, தீராதவேதனேயைச் சுமந்தபடி அவர்களேத் தொடர்ந்தபடியிருந்தாள்.

"சாமியாருமில்லே-மண்ணுங் கட்டியுமில்லே- அவரிடம் புதையல் ரகசியமுமில்லே - எல்லாம் பொய் - பொழுது விடியும் வரையில் இப்படித்தான் நடப்பேன்" என்ற உண்மையை பரிமளாவிடம் சொல்லி விடலாம் என்று துக்காராம் துடித்தான். அருகிலே வெள்ளியம்பலம் வருவது அவனுக்கு அச்சமூட்டிற்று.

இருளின் கனம் கரையத் தலேப்பட்டது. லேசாக வெளுப்பு தோன்ற ஆரம்பித்தது. விடிவெள்ளி உதயமாக வேண்டிய நேரம்போல் தெரிந்தது. துக்காராமுக்கு மனதுக்குள்ளே மகிழ்ச்சி அரும்பியது. இன்னும் இரண்டொரு மணி நேரங்களில் தான் தப்பிவிடலாம் என்று எதிர்பார்த்தான். இப்படி, ஆளுக்கொரு நினேவாக நடந்துகொண்டிருக்கும் அவர்கள் மூவரின் கவனத்தையும் ஒரு பயங்கரமான முணகல் சப்தம் கவர்ந்தது.

"ஆ! அய்யோ — அம்மா — அப்பா! அய்யோ — அய்யோ" என்ற வார்த்தைகள் கீழ் ஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருந்தன.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# ‘வினை’ அறுக்கிறார் வேதியர்!

பொன்முடியின்......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

தடியால் தாக்கி—கண்ணீர்ப் புகைவிட்டு ‘கவந்தக் கூத்து’ ஆடினாரோ, அதே ஆச்சாரியார் தான் ‘அரவணைப்பு’ தருகிறார்!

காலம் எவ்வளவு மாறிவிட்டது பார்த்தாயா? இதோ காலம் மாறுகிற வேடிக்கையை இன்னும் பார், குமார்!

“எனது குழந்தை பி. சி. ஜி. ஊசி போட்டுக் கொண்டது. ஜனாதிபதியின் குழந்தை ஊசி போட்டுக் கொண்டது’ -என்று டாக்டர் சமாதானம் கூறுவது விஞ்ஞான ரீதியான, நியாயமான, வாதமா என்று கேட்கிறேன்!” (சு. மி.)

—இதுவும் ஆச்சாரியாரது வாசகங்கள் தான்!

அன்புள்ள குமார்! நேற்று நடந்த நிகழ்ச்சிகள் உன் மனக் கண் முன்பு தெரிகிறதா? எப்படித் தெரியாமலிருக்க முடியும்? அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடக்கூடிய செய்திகளா அவை? தமிழினம் உள்ளவரை—தமிழினத்துக்கு தன்மானம் உள்ளவரை—அந்த நிகழ்ச்சியெல்லாம் சரித்திரத்தின் ஏடுகளிலே இரத்தத்தால் அல்லவா எழுதப்பட்டிருக்கும்! திராவிட முன்னேற்ற கழகத்தைப் பிறந்தபோதே போர் வீரனாக்கிய நிகழ்ச்சி அல்லவா, குமார், அது!

அன்று ஆச்சாரியார் என்ன கூறினார்? ‘புத்தன் பிறரைக் கேட்டுக் கொண்டா ஞானோபதேசம் செய்தான்? புத்தன் யாரைக்கேட்டான்? அசோகன் யாரைக் கேட்டான்? அய்தர் யாரைக் கேட்டான்?’- இப்படியெல்லாம் கேட்டு, “பொதுமக்களின் பிரதிநிதிகளாம் எம். எல். ஏ. க்களைக் கலக்காமல் காரியமாற்றுகிறீர்களே? குலதர்மத் திட்டத்தைக் கொண்டு வருகிறீர்களே?” —என்று கூக்குரல் போட்ட நம்மைப் பார்த்து ‘திமிர்வாதம்’ பேசினார்.

அவர்தான் இப்போது பேசுகிறார்—அழுகுரல் தொனிக்க-தோல்வியைத் தழுவியபடி—‘ஜனாதிபதியின் மகன் போட்டுக்கொண்டார்—என் மகள் போட்டுக்கொண்டார்’என்று கூறுவது விஞ்ஞான ரீதியான, நியாயமான, வாதமா?’ என்று!

புத்தனையும், ஏசுகிருஸ்துவையும் துணைக்கு அழைத்து எதிரியின் கண்களிலே மண்ணைத் தூவுகிற அளவுக்குப் பேசியது, ‘விஞ்ஞான ரீதியான, நியாயமான’ வாதமாம்!

தன் குழந்தையையும், ஜனாதிபதியின் குழந்தையையும் உதாரணம் காட்டுவது ‘விஞ்ஞான ரீதியான, நியாயமான’ வாதமில்லையாம்!

அது மட்டுமா?

“விஞ்ஞான மனத்துடன் ஆராயாமல், ஏதோ, தாம் கண்ட அரைகுறை உண்மையை விடாப் பிடியாக உபயோகிக்க வேண்டுமென்ற பாசத்தால் ஏற்படும் தவறுதான் இந்த பி. சி. ஜி.”

—என்றும் அந்த வேதியர் பேசியதாக ‘சுதேச மித்திரன்’ செப்புகிறது.

அந்தப் பகுதியை மீண்டுமொரு முறை படித்துப் பார், குமார்!

“தாம் கண்ட அரைகுறை உண்மையை விடாப்பிடியாக உபயோகிக்க வேண்டுமென்ற பாசத்தால் ஏற்படும் தவறும்.”

அது! பி. சி. ஜி.யைத் தான் குறிப்பிடுகிறார், அவர்! ஆனாலும் அது, யதேச்சாதிகார வழிப்படி—ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையைக் கலக்காமல் அவர் கொண்டுவந்த கல்வித் திட்டம் குறித்து நாம் சொல்லிய வார்த்தைகளின் படப்பிடிப்பையும் ஒத்திருக்கிறது!

குலதர்மத் திட்டம் ‘விஞ்ஞான மனத்துடன்’ ஆராயப் படவில்லை என்றுதான் நாமும் கூறினோம்.

‘தாம் கண்ட அரைகுறை உண்மையை விடாப்பிடியாக உபயோகிக்க வேண்டுமென்கிற பாசத்தால் ஏற்படும் தவறு’என்று தான் சுட்டிக் காட்டினோம்!

— அப்போதெல்லாம் செவிட்டுக் காதை நம்மிடம் திருப்பியவர், இன்று காமராசரின் கேளாக் காதிற்கு எதிராக ‘அபாயச் சங்கு’ ஊதும் அவல நிலையைப் பார்க்கிறோம்!

அவர் குரலிலே ஏமாற்றம் எதிரொலிக்கிறது! மாடி வீட்டிலே வாழ்ந்தவன்-கோடி கோடியாகச் சொத்து கொண்டவன்—பின்னர் ஒருநாள் திருவோடு சகிதம் தெருத் தெருவாக அலையவேண்டியிருந்தால், அவன் குரலிலே எவ்வளவு நடுக்கம் இருக்குமோ—எவ்வளவு சோகம் தொனிக்குமோ-அவ்வளவும் ஆச்சாரியாரின் லெட்சுமிபுரப் பேச்சிலே கேட்கிறது!

கேள்வி கேட்டுக்கொண்டே வாழ்ந்தவர் இன்று பதில் சொல்கிறார். பாவம்; பரிதாபமான நிலைமை தான், அவருக்கு!

இந்த நேரத்திலேதான், குமார், நான் முன்பு குறிப்பிட்டேனே, அஷ்டகோடி ஐசுவரியத்துக்கு உடையவனாயிருந்த ஜார் வேந்தன் ஓட்டாண்டியாய்ச் செத்ததும்—அணி அணியாய்ப் படைகளைச் செலுத்தி, ஏவலர் புடைசூழ வாழ்ந்த நெப்போலியன் ‘அநாதையாய்—ஆதரவற்றவனாய் மரித்த கதையும் நம் நினைவுக்கு வருகிறது.

—இன்று அதே நிலையில்தான் ஆதரவற்ற நிலையிலே புலம்புகிறார், ஆச்சாரியார்!

பி. சி. ஜி. குத்தியதால் கோவையிலே யாரோ இறந்ததாகவும்—அதை விசாரிக்க அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்திருப்பதாகவும் ஒரு செய்தி வந்ததல்லவா? அது குறித்து ஆச்சாரியார் என்ன சொல்கிறாரென்று, கேள்!

“கமிட்டி அமைக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு, அதன் அங்கத்தினரில் ஒருவர், கடலூரில் ஒரு கூட்டத்தில் ‘பி. சி. ஜி. மிகச் சிறந்தது’ என்று அபிப்பிராயம் தெரிவித்தார். அதிலிருந்தே, நீதி வாய்ந்த மனதுடன் பிரச்சினையை அணுகவில்லை என்று தெரிந்தது.”

—இதுவும் அவர் கருத்துதான். இங்குதான் ஆச்சாரியாரின் நிலைமை சோகத்தின் சிகரத்தை எட்டியிருக்கிறது.

நடுவு நிலையில்இருந்து ஆராய்ந்து முடிவுகூற கமிட்டி அமைப்பதும் அதிலே அரசாங்கத்துக்கு ஏற்ற பின்பாட்டுக்காரர்களை அங்கத்தினர்களாக்குவதும், சில பல மாதங்கள் சென்ற பிறகு அந்தக் கமிட்டி எதிர்பார்த்த வண்ணமே அரசாங்கத்துக்குச் சார்பாக தன் முடிவைத் தெரிவிப்பதும், அந்த இடைக்காலத்துக்குள் அந்தப் பிரச்சினையின் ‘சூடு’ ஆறிவிடுமென்று எதிர்பார்ப்பதும்—பழைய ஏகாதிபத்ய வழக்கங்கள்! ‘கல்கி’ யார் பல தடவை ‘கார்ட்டூன்’ தீட்டி கேலி பேசிய முறைகள்!

அதைத்தான் இப்போது ஆச்சாரியார் கண்டிக்கிறார்!

எந்த ஆச்சாரியார்?

முன்பு கல்வித் திட்டத்தைப் பரிசிலனை செய்ய சில தலையாட்டி பொம்மைகளைக் கொண்ட ‘கமிட்டி’யொன்றை நியமித்து, எதிர்க் கட்சிக்காரர்களை ஏளனம் செய்தாரே, அதே ஆச்சாரியார் தான்!

அந்தக் கமிட்டியின் அங்கத்தினர்களுக்கு ஒரு சில பள்ளிகளை மட்டும் காட்டிவிட்டு, குலதர்மத் திட்டம் தோல்விப் படுகுழியிலே விழுந்து தவித்ததை அவர்கள் கண்களுக்குக் காட்டாமல் மறைத்துவிட்ட அதே ஆச்சாரியார்தான்!

அவர்தான் காமராசர் அமைத்த கமிட்டியிலே ‘நீதி இல்லை; நேர்மை இல்லை’—என்று குற்றம் சாட்டுகிறார்!

‘தன் வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்’ என்று பட்டினத்தார் நடையிலே பாடுவார்கள்!

‘யானைக்கு ஒரு காலம்; பூனைக்கு ஒரு காலம்’—என்று பழமொழி சொல்லுவார்கள்!

ஆமாம்; அவருடைய வினைதான் இன்று ஆச்சாரியாரை உயிரோடு வைத்துக் கொளுத்துகிறது!

அன்று யானை போல் பிளிறிய வேதியர்தான் இன்று பூனை போல் ஆகிவிட்டார்!

அவரது நிலை கண்டு நம் நாட்டு மக்களால் அனுதாபம் காட்ட முடியவில்லை—அன்பிருந்தால் அல்லவோ அனுதாபம் பிறக்கும்!

தென்னகத்து மக்கள் அந்தப் பூனையை வேடிக்கை பார்க்கிறார்கள்!

‘இந்தப் பூனையும் பால் குடிக்குமா?’ என்றிருந்த நிலை மாறி, ‘இந்தப் பூனையும் விஷம் குடித்து வாழ்கிறதே!’—என்ற நிலை பிறந்து விட்டது!

இதோ, அந்தப் பூனையும் தத்துவம் பேசுகிறது, கேள், குமார்!

“இந்தியாவில் பி. சி. ஜி. கட்டாயமில்லை என்பது உண்மை. ஆனால் அதன் உண்மை ஆபத்து பற்றி மக்களுக்கு முன்னதாகக் கூறுவது சர்க்கார் கடமை. அப்படிச் செய்தார்களா என்று கேட்கிறேன்!”

அதட்டிக் கேட்கிறார் ஆச்சாரியார்!

பி. சி. ஜி. யின் ஆபத்து பற்றி பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டுமாம், ஆட்சியாளர்கள்!

இந்தச் சேதி கேட்டு சிரிப்புத்தான் வருகிறது, குமார்!

மாமிசம் வேண்டாமென்று வேங்கை வீர சைவனாகி விட்டதாம்!

அதைப் போலத்தான் இருக்கிறது ஆச்சாரியாரின் இந்தப் பேச்சு!

நான் அறுதியிட்டுக் கூறுகிறேன் குமார், ஆச்சாரியார் தன் வாழ்நாளிலேயே இப்போதுதான் முதன் முறையாக ‘பொதுமக்கள்’ என்ற வார்த்தையையே உபயோகித்திருக்கிறார்!

ஆமாம்; தான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்பதுபோல பொதுமக்களின் பாதார விந்தங்களிலே ‘சாஷ்டாங்க நமஸ்காரம்’ செய்கிறார், ஆச்சாரியார்!

அது மட்டுமா? அந்தப் பூனை வள்ளுவப் புலவனைப் போல உபதேசம் செய்வதையும் கொஞ்சம் கேள், குமார்!

“ஊசியுடன் வரும் எந்த டாக்டரும் நோய் தீர்த்து விடுவார் என்பது நம் ஜனங்களின் நம்பிக்கை!

—சபாஷ், ஆச்சாரியாரே! சர்க்கரையென இனிக்கிறது உங்கள் கருத்து!

மூலிகை பறிப்பவனை யெல்லாம் மருத்துவனென்று நினைப்பவர் தான் நம் மக்கள்!

—எப்படி வந்தது ஆச்சாரியாரே, இந்த நிலைமை? இந்த மூட நம்பிக்கை எவ்வாறு வளர்ந்தது?

நம் மக்கள் பிறவியிலேயே முட்டாள்களா? சக்தி அற்றவர்களா?

இல்லை, ஆச்சாரியாரே, இல்லை!

நூலும், மத ஏடும் கொண்ட நீர் நுழைந்தீர் — வேலும் வாளும் கொண்ட எம் இனம் குலைந்தது.

யாகம் வந்தது — ஞானம் தொலைந்தது!

பகவான் வந்தான்!—பகுத்தறிவு ஓடிற்று!

தேன் துளி சிந்தும் பன்மலர்ச் சோலையிலே, நீர் விரட்டி வந்த ஆட்டு மந்தைகள் புகுந்து ஆட்டம் போட்டன! அழிந்தது எங்கள் பூங்கா — அழிந்தோம் நாங்கள்!

நிமிர்ந்தவர் தாழ்ந்தோம்—நீண்டு நிமிர்ந்தது உங்கள் வாழ்வு!

அந்த வாழ்வும், வளமும் இன்னும் உங்களிடம்தான் இருக்கிறது.

—இப்படியெல்லாம் சொல்லத் தோன்றுகிறது, எனக்கு!


அன்று நாம் ஏமாந்த நேரத்தில் ஏற்றம்கொண்ட வேதிய குலக் காவலர்தான், ‘ஊசியுடன்வருவோரையெல்லாம் டாக்டர்கள்’ என்று நாம் நினைப்பதாக கேலி பேசுகிறார்!

பேசட்டும்—பேசட்டும்! இன்னும் எத்தனை நாளைக்குத்தான் அவர்கள் பேசுவார்கள் என்பதையும் பார்த்துவிடுவோம்

அதிகமாகவே எழுதிவிட்டேன்—முடித்துவிடுகிறேன்!

அடுத்தக் கடிதத்தில் சந்திக்கிறேன்.

அன்புள்ள,
பொன்முடி.



# நில், நண்பா! எங்கே ஓடுகிறாய்?

தி. மு. க: வாப்பா தமிழரசு! என்ன, வரும்போதே ஒரு மாதிரியாக வருகிறாய்? மகாநாடு எல்லாம் பலந்தானா?

தமிழரசு: பலமில்லாமல் என்ன-ஹால் நிரம்பி வழிந்தது-தெரியுமா?

தி: ஹாலில்தான் மகாநாடா? பத்தாயிரம்பேர் கூடும் பந்தல் அமைக்கப் போகிறோம் என்றாயே; ஒருவேளை கீற்று கிடைக்கவில்லையோ? பரவாயில்லை—எவ்வளவு வசூல்?

த: கட்டணம் கிடையாது!

தி: ஓகோகோ சரிதான்! கட்டணமில்லாத மாநாடு, பட்டணத்திலே போட்டுக்கூட ஹால் அளவுக்கு மக்கள் கூடுகிறார்கள் என்றால், உங்கள் கழகம் வளர்கிறது என்று காமராசர் நடுங்கித்தான் தீர்வார்! போகட்டும். மாநாட்டில் யார் யாருக்கு 'அர்ச்சனை' நடந்தது?

த: அர்ச்சனை கிடையாது! அதெல்லாம் 'அநுச்சாரம்' என்று விட்டு விட்டோம். கலாச்சார முறையிலே ஒரு அறைகூவல் விட்டிருக்கிறோம்!

தி: யாருக்கு?

த: உங்களுக்குத்தான்.

தி: எங்களுக்கா?

த: ஆமாம்! ராமாயணத்தைப் பற்றி அறிவுப் போர் நடத்த அறிஞர் கூட்டம் முன் வருமா? — என்று கேட்டோம்!

தி: அறிஞர் கூட்டம் முன் வருமா என்று எந்தக் கூட்டம் கேட்கிறது?

த: எங்கள் கூட்டம்!

தி: ஹி ஹி ஹி... பரவாயில்லை! உண்மையை ஒத்துக் கொண்டாய்! நண்பனே! உனக்கு சேதுப் பிள்ளையைத் தெரியுமா?

த: ஏன் தெரியாது? எங்கள் அபிமானி— கம்ப ராமாயணத்தைக் கரைத்துக் குடித்த பெரும் புலவர்— வீரத் தமிழர்!

தி: அந்தப் புலவர் பெருந்தகைக்கும், அறிஞர் அண்ணாவுக்கும் கம்ப ராமாயணம் பற்றி ஒரு சொற்போர் நடந்ததே; அதன் முடிவு தெரியுமா?— என்ன தோழனே விழிக்கிறாய்?— சேதுப் பிள்ளையே நிற்க முடியாத இடத்திலே, சேற்றுப் பிள்ளைகளாகிய நீங்களா நிற்கப் போகிறீர்கள்? கம்ப ராமாயணத்தைக் கரைத்துக் குடித்தவரே தோல்வி கண்டாராம்; இவர்கள் சவால் விடுகிறார்களாம்; சவால்!

த: சரிதான் சும்மா இரு! நானே ராமாயணத்தைப் பற்றி விளக்குகிறேன். அதற்குப் பதில் சொல்!

தி: விளக்கு—பார்ப்போம்!

த: தசரதனின் பல தார மணத்தையும், ராமனின் ஏக பத்தினி விரதத்தையும் விளக்குவதுதான் கம்ப ராமாயணம் என்ற நீதி நூல்!

தி: தசரதனின் பல தார மணம் கம்ப ராமாயணத்திலே எங்கே கண்டிக்கப் பட்டிருக்கிறது என்று உன்னால் கூற முடியுமா?

த: அது... அது... அவரைக் கேட்டுச் சொல்கிறேன்!

தி: ராமன் ஏகபத்தினி விரதன் என்று கூறுகிறார் கம்பர்; சரி! தசரதன் மனிதன். ராமன் கடவுள் அவதாரம்! இதையும் கம்பர்தான் எழுதியிருக்கிறார்; இல்லையா?

த: ஆமாம். சந்தேகமென்ன?

தி: சந்தேகம் இங்கேதான் பிறக்கிறது. தசரதன் மனிதன். அதனால் அவன் பல பெண்களோடு வாழ்கிறான். ஏக பத்தினி விரதம் அனுஷ்டிக்க முடியவில்லை. ராமன் கடவுள் அம்சம். அவனால் ஏக பத்தினி விரதம் அனுஷ்டிக்க முடிகிறது! ஏக பத்தினி விரதமென்பது கடவுளால் மட்டுமே அனுஷ்டிக்கக்கூடிய காரியம் என்று நாம் நினைக்கும்படியாக கம்பர் எழுதியிருக்கிறார் என்கிறேன் நான்! இதற்கு என்ன சொல்லுகிறாய்?

த: கம்பராமாயணப்படி சுக்ரீவன் கூட ஏகபத்தினி விரதன்தான்! அவன் என்ன கடவுள் அவதாரமா?

தி: சரியான கேள்வி தோழா! இதை உன்னுடைய தலைவரிடம் கேள்! 'ஏக பத்தினி விரதத்தை சுக்ரீவன் அனுஷ்டித்து இருக்கிற போது— ராமன் அனுஷ்டிப்பது என்ன பெரிய காரியம்! ராமனுக்கு மட்டும் இதற்காக உயர்வு சொல்வது எப்படிப் பொருந்தும்?" என்று கேள்! அவர் இதற்கு என்ன பதில் சொல்கிறார் என்று பார்!

த: அதெல்லாம் எனக்குத் தெரியாது— எங்கள் தலைவர் சொல்லி விட்டார்; கம்பர் எங்கள் பாட்டன்— பாரதி எங்கள் அப்பன்! அவ்வளவுதான்!

தி: கம்பர் உங்க பாட்டனென்றால், அம்பிகாபதியல்லவா உன் அப்பனாக இருக்க வேண்டும்?

த: "ஒருத்தனுக்கு ஒருத்தி" என்ற தத்துவத்தை போதிக்கவே கம்பர், ராமாயணத்தை எழுதினார் என்பது எங்கள் தலைவரின் வாதம்.

தி: சரி! ஒருத்திக்கு ஐந்து பேர் என்ற கதையை "வியாசர் விருந்து" என்ற பெயரால், உங்கள் தலைவர் கிராமணியாரின் குருநாதர் ஆச்சாரியார் எழுதினாரே; அது ஏன் கண்டிக்கப்படவில்லை?

த: இந்த சினிமா வசன மெல்லாம் என்னிடம் பேசாதே! ஒழுக்கமும், நெறியும் கெட்டு பணங் கொடுக்கிற தொழில் சினிமாத் தொழில் என்பது என் தலைவர் கருத்து!

தி: அந்தத் தொழிலுக்கு பாட்டு எழுதுகிறவர்களாக உங்கள் கு. சா. கிருஷ்ணமூர்த்தியும், கா. மு. ஷெரீப்பும் இருக்கிறார்கள் என்பதை ஏனப்பா மறந்து விட்டாய்? தலைவருக்கு கட்டபொம்மன் வசன 'சான்ஸ்' கிடைக்கவில்லையென்பதற்காக அவர் தான் வயிற்றெரிச்சலைக் கொட்டுகிறார் என்றால், நீயுமா இப்படி?

த: சரி— சரி— நான் வருகிறேன்.

தி: நில் நண்பா; எங்கே ஓடுகிறாய்?

## நாட்டிய கலாராணி...

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

ரித்துவிட்டுப் போக இப்படித் திரும்பினேன்"

"மிகவும் மகிழ்ச்சி-என் பாக்கியமே பாக்கியம்!"

"கோமேதகம்!"-அரசனின் குரலிலே நடுக்கம் பிறந்தது.

"என்ன மன்னவா?"

"ஒன்றுமில்லை!" இப்படி சொல்லிக்கொண்டே அவள் தோளிலே கையை வைத்தான். கோமேதகம், தன்னை விடுவித்துக் கொண்டே,

"அரசே" என்று கொஞ்சம் அழுத்தமான குரலிலே எச்சரித்தாள்!

தோல்வியோடு திரும்பிவிட அவன் எண்ணவில்லை.

"கலாதேவி! கருணை காட்டு!" என்று அவளை இறுக அணைத்தான்.

"போய்விடுங்கள் இதை விட்டு!" என்று அவனை உதறிவிட்டாள் கோமேதகம்.

"முடியாது! நீ என் பேச்சைக் கேட்கவேண்டிய பிரஜை!" என்றபடி அவளை இழுத்தான். "இதழை அசைத்துவிடு இன்பமே! இன்று நீ நாட்டியக் கலாராணி — நாளை, இந்த நாட்டுக்கே மகாராணி!" என்று கெஞ்சினான்.

மறுத்தாள்—அறிவுரைகள் கூறினாள்.

"வேந்தே! விபரீதமான காரியம் இது! வேண்டாம் போய்விடுங்கள்! ஆட்டக்காரிதானே; ஐஸ்வர்யமுள்ளவர்கள் அனைவருமே ஆட்டிவைக்கலாம் என்று கருதிவிடாதீர்கள்! கோமேதகம் அப்படியல்ல! குடும்பக் கலையும் தெரிந்தவள்! கோணல்வழி நடந்து கோபுரத்தில் ஏறிக்கொள்ள ஒருக்காலும் சம்மதிக்க மாட்டாள்!" என்று உரக்கக் கூவினாள்.

"உஸ்...சப்தம் போடாதே!" என்றபடி மீண்டும் நெருங்கினான்.

நெருப்பானாள்! அதன் விளைவு, அவன் கன்னத்திலே ஒரு அடி!— பிறகு, மன்னன் அங்கு நிற்கவில்லை. போய்விட்டான்.

★

கோமேதகத்தின் வாழ்விலே புதிய திருப்பம் ஏற்பட அந்த நிகழ்ச்சி காரணமாகி விட்டது. அன்றுடம் அவளைக் காணுவதற்காக அணிமணிகளோடு வரும் சீமான்களை அவள் பார்ப்பதற்கு மறுத்து விட்டாள். அவளைப் பற்றி புகழ் பாடும் புலவர்களைக் கூட அவள் அனுமதிப்பதில்லை! நாட்டிய அரங்குகளும் நிறுத்தப்பட்டு விட்டன. கலைத் துறையில் ஈடுபட்ட பெண், விலை போகும் பொருளாகவே இருக்க வேண்டுமென்ற தத்துவம் ஒழியும்வரையில் பெண்கள் கலைத்துறையில் ஈடுபடக் கூடாது— என்ற அழுத்தமான முடிவுக்கு வந்து விட்டாள். அபலைகளை — அநாதைகளை -அதிதிகளை உபசரிப்பது, அவர்களோடு உலக விவகாரங்களைப்பற்றி அளவளாவுவது, அவர்கட்குத் தேவையான உதவிகளைச் செய்வது— இப்படி திரும்பிவிட்டது கோமேதகத்தின் வாழ்வு! தலைநகரிலே குடியிருப்பதுகூட பிடிக்காமல், எங்கேயோ ஒரு மூலையில் உள்ள குக்கிராமத்திலே வசிக்கப் புறப்பட்டாள். அங்கே ஒரு குடிசை. அதிலே அவளும், அவளிடம் ஆதரவு கோரி வரும் அநாதைகளும் வாழ்ந்தார்கள்! ஆடிச் சேர்த்த பொருளையெல்லாம் ஆதரவற்றவருக்கு வழங்குவதிலேயே தனி ஆனந்தம் கொண்டாள்.

அந்தச் சமயத்திலேதான் அவள் இல்லத்தை நாடி ஒரு இளந் துறவி வந்தான்! அவளுக்கு விதிக்கப்பட்ட கடுந் தண்டனைக்குக் காரணமான அந்தத் துறவியை அன்போடு வரவேற்றாள். கனி நிறைந்த தட்டோடு எதிர் வந்து நின்ற இளமயிலின் பனி ததும்பும் பார்வையை ரசித்தபடி நின்றான் அந்தத் துறவி. அந்தத் துறவியைத்தான் அவள் கெடுத்துவிட்டாள் என்று குற்றச்சாட்டு வீசப்பட்டது— கோர தண்டனை வழங்கப் பட்டது! கொற்றவனுக்கு இணங்கவில்லை என்ற காரணம் மட்டும் ஒளிந்திருக்கவில்லை, அந்தத் தீர்ப்பிலே!

துறவியைக் கெடுத்துவிட்டாள் என்பதற்காக வழங்கப்பட்டதுமல்ல அந்தத் தண்டனை!

தனக்கு இணங்காதது— தபசியைக் கெடுத்தது- இவை இரண்டுமில்லாமல் இன்னொரு ரகசியக் காரணமும் மறைந்து கிடந்தது! அந்தக் காரணம், அவனுக்கும், அவனது அந்தரங்க அமைச்சர்களுக்கும் மட்டுமே தெரியும். அந்தோ பரிதாபம்; அந்தக் காரணம் ஆடலரசியாம் கோமேதகத்திற்கும் தெரியாது!

தெரிந்தால்தான் என்ன? தீக்குண்டத்திலிருந்து தப்பிவிட முடியுமா? அதோ, அவளை நோக்கி வாய் பிளந்து நிற்கும் பயங்கரமான மரணத்திலேயிருந்து விடுபடத்தான் முடியுமா?

செந்தாமரையவள்! செந்தீ படரப் போகிறது அந்தச் சிவப்பு ரோஜா மீது! தலைநகரத்து நடுவிலே அமைக்கப்பட்ட விகாரமான மேடை! அதிலே அவளது பிணம் ஊசலாடப் போகிறது!

கடைக் கண்ணழகி என வர்ணித்தனர்— அந்தக் கண்களை சிப்பிக்குள்ளேயிருந்து முத்தை எடுப்பது போல கழுகுகள் கொத்தி எடுத்துவிடப் போகின்றன!

அப்பப்பா! நினைக்கவே முடியவில்லை. எவ்வளவு கோரமான சாவு! எத்துணை அநியாயமான தண்டனை!

அதையும் தாங்கிக் கொண்டு அவள் அசைவற்று நிற்கிறாளே; அதுவல்லவா ஆச்சரியம்!

[ தொடரும் ]

## ராமாரே ராமா....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

*சாமிப் படையாச்சியாரைப் பார்த்தேன்.*

**நான்:** *அது என்ன, அர்த்தமில்லாமல் ராமசாமிப் படையாச்சியாரை பேட்டி கண்டிருக்கிறீர்கள்!*

**ஜிப்:** *இது தெரியாதா உங்களுக்கு? அரசியல் துறையிலே ஒரு கட்சியை விட்டு இன்னொரு கட்சிக்குத் தாவி, மனிதனுக்கும் எங்களுக்கும் உள்ள ஒற்றுமையை நிரூபித்துக்காட்டியவர் அவர்தானே! அவரை நான் எப்படிப்பார்க்காமலிருக்க முடியும்!*

**நான்:** *உங்கள் விளக்கமும், வியாக்யானமும் நன்றாக இருக்கிறது...சினிமா ஒழிய வேண்டுமென்பவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?*

**ஜிப்:** *உலகத்திலேயே அது போன்ற 'பிரகிருதி'களை இங்குதான் பார்க்கிறேன். பாவம்! அவர்களுக்கும் ஒரு 'சினிமா சான்ஸ்' கிடைத்தால்அப்படியெல்லாம் பேசி, எழுதிக் கொண்டிருக்கமாட்டார்கள். அதற்காக நான் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறேன்.*

**நான்:** *தயவுசெய்து உங்கள் திட்டத்தை வெளியிடலாமா?*

**ஜிப்:** *இதோ, சொல்கிறேன். அதாவது இனிமேல் நான் நடிக்கப்போகும் படங்களிலெல்லாம் நான் நடிக்காமல், என் வேஷத்தைசினிமாஒழிப்புக்காரர்களுக்குத் தரப்போகிறேன். இதைப் போல நான்கைந்து படங்களில் அவர்களையும் என் வேஷத்தில்நடிக்கவைத்து விட்டால், அவர்களுக்கும் 'சான்ஸ்' கிடைத்தது போலவுமிருக்கும். வீண் கூச்சலும் ஒயும்!*

**நான்:** *பேஷான திட்டம்! இதை எப்போது அமுல் நடத்தப் போகிறீர்கள்? இதற்கு எத்தனை வருஷங்கள் பிடிக்கும்?*

**ஜிப்:** *இதை என்ன, உங்கள் நாட்டு ஐந்தாண்டுத் திட்டம் என்று நினைத்துவிட்டீர்களா, பத்து ஆண்டுகளுக்குள் முடிப்பதற்கு? இப்போதே பூர்வாங்க வேலைகளெல்லாம் துவங்கிவிட்டன. முதன் முதலாக என்னுடைய வேஷத்தில், எனக்குப் பதிலாக நடிப்பதற்கு திரு. சுப்ரமணியத்தையும், ஆச்சாரியாரையும், மற்ற சினிமா ஒழிப்புக்காரர்களையும் நானேயே ஒப்பந்தம் செய்யப் போகிறேன்.*

**நான்:** *சபாஷ்! தாங்கள் பெரிய செயல் வீரராக இருக்கிறீர்களே?*

**ஜிப்:** *பின்னர் என்ன? ஒரே நொடியில் இலங்கைக்குப் பாலம் கட்டிய பரம்பரையல்லவா? அப்படித்தான் இருக்கும்!*

**நான்:** *சரி; இந்தியர்களில் உங்களுக்கு யாரை அதிகம் பிடிக்கும்?*

**ஜிப்:** *மிஸ்டர் முன்ஷிமேல்தான் எனக்கு அபார ஆசை! அதைக் காதலென்றே சொல்லலாம்.*

**நான்:** *என்ன? முன்ஷிமேலா?*

**ஜிப்:** *என்ன, வாயைப் பிளக்கிறீர்கள்? எங்கள் இனத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நாடெங்கும் மரங்களை வளர்த்து 'வன மகோத்சவம்' நடத்திய 'அனுமார் பக்தன்'அல்லவா, அவர்! ஆனால் அவர் ஒரு தவறு செய்துவிட்டார்!*

**நான்:** *என்ன அது?*

**ஜிப்:** *வன மகோத்சவத்தின் போது நாடெல்லாம் வாழை மரத்தையே நடும்படி உத்தரவிட்டால் எங்களுக்கெல்லாம் வசதியாக வாழைப் பழம் கிடைத்திருக்கும். எங்களுக்கும் எவ்வளவோ மகிழ்ச்சியாக இருந்திருக்கும்... உம்...*

**நான்:** *கவலைப்படாதீர்கள். இதுபற்றி நான் பார்லிமெண்டில் ஒரு சட்டம் கொண்டுவர ஏற்பாடு செய்கிறேன்.*

(இந்த நேரத்தில் மிஸ்டர் ஜிப்பி 'டிபன்' கொண்டு வரும்படி தன்னுடைய பணியாளுக்கு உத்தரவிட்டார்.)

**நான்:** *ரொம்ப தாங்ஸ்!... கடைசியாக ஒரு கேள்வி— தென்னாட்டிலே திராவிட நாடு கேட்டு ஒரு சாரார் கிளர்ச்சி செய்கிறார்களே, அதுபற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?*

**ஜிப்:** *நான் சென்ஸ்! நான் நேரு பாதையில் நடப்பவன். எனக்கு இந்தப் பிரிவினை உணர்ச்சிகளெல்லாம் பிடிக்காது. டார்வின் சித்தாந்தப்படி நாமெல்லாம் ஒரே இனம்; ஒரே குடும்பம். உலக மக்களெல்லாம் ஆதியில் குரங்குகளாய்த்தான் இருந்தார்கள். எனவே மீண்டும் அந்த நிலைமை வந்து நாமெல்லாம்உலக'கவர்ன்மெண்டின்' கீழ் வாழ வழிவகை தேட வேண்டும்!*

**நான்:** *சபாஷ்! இன்னொன்று; எங்கள் நாட்டில் நடைபெறும் பத்திரிகைகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?*

**ஜிப்:** *சில பத்திரிகைகள் கழுதைகளின் உணவுக்காகவே தயாராகின்றன என்று கேள்விப்பட்டேன். அதனால் அதைப் பற்றி அதிகம் கேட்காதீர்கள். அமெரிக்காவிலிருந்து ஏதாவது கழுதைகள் வந்தால் அவர்களைக் கேளுங்கள்.*

**நான்:** *தமிழ் நாட்டு ஸ்டுடியோக்களை சுற்றிப் பார்த்தீர்களா? என்ன தெரிந்து கொண்டீர்கள்?*

**ஜிப்:** *மேல் நாட்டிலிருந்து வருகிற காமிரா முதலிய கருவிகளுக்கு பூமாலை போட்டு பூஜை நடத்துகிற புத்திசாலிகள் உலவுகிற புனித ஸ்தலமல்லவா ஒவ்வொரு ஸ்டுடியோவும்!*

**நான்:** *பேஷ்! பேஷ்!! அமெரிக்கா திரும்புவதற்கு முன்பு, இந்தியாவில் எந்தெந்த இடங்களுக்கு செல்ல உத்தேசமோ?*

**ஜிப்:** *எங்கே போனாலும் போகாவிட்டாலும், திருப்பதியை ஒரு முறை போய் தெரிசித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது! திருப்பதிக்கு போகாத சினிமா நட்சத்திரங்களுக்குப்பெருமை கிடையாதாமே! நானும் ஒரு சினிமா நட்சத்திரமல்லவா?*

**நான்:** *ஆமாம் ஆமாம் — பரம்பரையாகவே அது உங்கள் புண்ய ஸ்தலம்!*

**ஜிப்:** *ஹிஹிஹி...சரி... அதோ 'டிபன்' வந்துவிட்டது. சாப்பிடுங்கள்.*

(நான்திரும்பிப்பார்த்தேன். ஒரு தட்டில் கொஞ்சம் பட்டாணிக் கடலையும், சில வாழைப் பழங்களும் இருந்தன.)

**ஜிப்:** *என்ன திகைக்கிறீர்கள்? இதுதான் 'குரங்கு டிபன்'!*

(இத்துடன் என் பேட்டி முடிவுற்றது.)

## தலையங்கம்.....

**ஆட்சியாளர்கள் அல்லவோ முதலாளி வேடம் தாங்கி, இங்கு முடங்கிக் கிடக்கும் செல்வத்தை வெளிக்கொணர்ந்து ஆலைகள் அமைக்க வேண்டிய காரியத்தில் ஈடுபட வேண்டும்!**

இந்திய அரசு இதைச் செய்து முடித்ததா?

இல்லையே!

இது ஏன் கிருஷ்ணமாச்சாரியாருக்குப் புரியவில்லை?

மிகச் சுலபமாகப் பேசிவிட்டார், 'தென்னகத்தில் முதலாளிகள் இல்லை-தொழிற்சாலைகளும் இல்லை' என்று!

இந்த நேரத்திலேதான் டி. டி. கே.யை நோக்கி நாம் கணை தொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் கூறியது உண்மையானால், வடநாட்டில் துவங்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் யாவும் தனிப்பட்ட முதலாளிகளுடையதுதானா?

சிந்திரியில் எரு உற்பத்தி சாலையைக் கட்டியவர் யார்?

சித்தரஞ்சன் இஞ்சின் தொழிற்சாலையின் கர்த்தா யார்?

உத்தரப் பிரதேசத்து சிமிண்ட் தொழிற்சாலையை நிர்மாணித்தவர் எந்த முதலாளி?

பென்சிலின் தயாரிப்புக்கு ஒதுக்கப்பட்ட மூலதனம் யாருடைய சொத்து?

பெயரளவில் இங்கே வாழ்கிறதே, பேரம்பூர் கோச் பேக்டரி— அது யாருக்குச் சொந்தம்?

நீப்பா காகிதத் தொழிற்சாலை டாட்டாவுடையதா?

வடக்கேயுள்ள டி. டி. டி. தொழிலகத்தை பிர்லாவா நடத்துகிறார்?

இல்லை; இல்லை; இல்லை — என்பதுதானே இவைகளுக்குப் பதில்!

அவைகளையெல்லாம் அரசாங்கமே நடத்திவரும்போது, தெற்கே மட்டும் ஆலைகள் அமைக்க அந்த அரசாங்கம் தயங்குவதேன்?

விந்தியத்துக்கு அப்பால் பிரமாண்டமான தொழிற்சாலைகள் நிறுவியிருக்கும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கிருஷ்ணமாச்சாரியார், தென்னாட்டுக்குத் தான் கூறிய காரணம் பொருந்திவருமா என்பதை மீண்டுமொருமுறை சிந்திக்கவேண்டும்.

**வடக்கே தொழிற்சாலை அமைப்பதற்கு அரசாங்கமே முதல் போடுமாம். தெற்கே தொழிலகம் அமைக்க முதலாளிகள் வேண்டுமாம்** — டி. டி. கே.யின் இந்தக் கூற்று அவர் படித்த பொருளாதாரத்துக்கே அவமதிப்பு தேடித் தருவதாகும்.

'சோஷலிச பாணி'யில் பீடுநடை போடுவதாகப் 'பீற்றி'க் கொண்டு, தொழில் துவங்குவதற்கு முதலாளிகள் இல்லை என்று கூறுவது பைத்தியக்காரத்தனம் என்பதையும் அவர் உணர வேண்டும்! இல்லையேல் உணர்த்த வேண்டிய கடமை நமக்கு ஏற்படும் என்பதையும் நம்மால் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

ஆவடியிலே நிறைவேறிய 'சோஷலிச பாணி' தீர்மானத்தை, கேவலம், தன்னுடைய ரஷ்ய விஜயத்திற்கும், வரவேற்புக்கும் உகந்த ஒரு 'பாஸ் போர்ட்' டாகத்தான் நேரு உபயோகித்தார் என்றால், அதைவிட வெட்கக்கேடு வேறெதுவுமே இல்லை — என்றுதான் சொல்லத்தோன்றுகிறது.

## புதையல்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

ஒலி வந்த திக்கிலே மூவரும் திரும்பினார்கள். ஒரு புதரின் பக்கமிருந்து வந்தது அந்த ஒலி. புதரண்டை சென்று பார்த்தார்கள். புதரோரத்திலே ஒரு உருவம் நெளிந்துகொண்டிருந்தது. உற்று கவனித்தார்கள். ஒரு கையில்லை. கை, வெட்டப்பட்டுரத்தம்பெருக்கெடுத்தபடியிருந்தது. முகத்தை மண்ணிலே புதைத்துக்கொண்டு குப்புறக் கிடந்தபடியால்,'அது யார்?, என்று உடனே கண்டு பிடிக்க முடியவில்லை. பரிமளா வினல்! அவள் துடித்துப் போனாள். "தூக்குங்கள்!" என்று கத்தினாள்.

வெள்ளியம்பலமும், துக்காராமும் சேர்ந்து, அந்த மனிதனை மெதுவாகப் புரட்டினார்கள்.

[ வளரும் ]

# பிறை வானம்



பிள்ளைகள் பகுதி...

## ஆட்டுக் குட்டி

★

நான் பிறந்து இன்னும் ஒரு வாரம் கூட ஆகவில்லை. பச்சைப் பசேல் என்ற செடி கொடிகள்—பழக்கமில்லாத புதிய உருவங்கள்—மனிதர்களைத்தான் குறிப்பிடுகிறேன்—அவர்கள் பேசும் புரியாத மொழி—இவையெல்லாம் எனக்குப் புதுமையாக இருந்தன. இல்லை; இல்லை; பயமாகவும் இருந்தது. நான் என் அம்மாவை விட்டு நகரவேயில்லை. கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு 'உலக'த்தைப் பற்றி தெரிய ஆரம்பித்தது. மனிதர்களில் எத்தனை விதங்கள்! நல்லவர்கள்; கெட்டவர்கள்—இரும்பு நெஞ்சக்காரர்கள்; எதற்கும் பயந்தவர்கள்—எத்தனை எத்தனையோ ரகங்கள்!

கேளுங்களேன்: அன்றுதான் நான் கொஞ்சம் தலையை வெளியே காட்டினேன். தெருவில் பையன்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். எனக்கு அவர்களைப் பார்க்க ஆசையாக இருந்தது. அந்தப் பையன்களும் என்னை கவனித்து விட்டார்கள். சிலர் ஆச்சரியத்துடன்—ஆனந்தத்துடன்—அன்புடன் பார்த்தார்கள். ஆனால், சில முரட்டுப் பையன்களோ, கையிலிருந்த பந்தை என் மீது வீசி எறிந்தார்கள். இது என்ன விளையாட்டோ! நான் அதற்கு மேல் அங்கு ஏன் நிற்கிறேன்? அடி வாங்கவா எண்ணுவேன்? துள்ளிக் குதித்து ஓடினேன். அம்மாவிடம் வந்தடைந்தேன்.

அந்தப் பையன்களை மறுபடியும் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவல்—அவர்களுடன் விளையாட வேண்டுமென்று கொள்ளை ஆசை—ஆனால் பயமாகயிருக்கிறதே, அந்த முரட்டுப் பையன்களை நினைத்தால்! அப்படியானால் நான் தனியாக இருந்து வாட வேண்டியதுதானா? எனக்கு என்னவோ போல் இருந்தது; கண்களில் நீர் கசிந்தது; அழுகையே வந்து விட்டது.

அதே சமயம் என்னை 'அழாதே' என்று தேற்றுவதைப் போல், ஒரு குரல் கேட்டது. "ஜோராயிருக்கே, மாமா!" என்ற சப்தம் கேட்டது திரும்பிப் பார்த்தேன். என் பக்கத்தில் ஒரு பையன்—புதுப் பையன்—அந்த வீட்டின் விருந்தாளி! அவனுக்குப் பக்கத்திலே வீட்டுக்காரர்—என் முதலாளி! அந்தப் பையன் ஏன் என்னை வெறிக்கப் பார்க்கிறான்? அவன் கண்களில் அன்பு மிதந்தது.

" அழகா! இதுதான் நான் சொன்னேனே, அது! இன்னும் பத்து நாள்கூட ஆகவில்லை பிறந்து"—என்றார் வீட்டுக்காரர்.

"மாமா, என்ன அழகாயிருக்கு! எனக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு மாமா!" என்று அந்தப் பையன் ஆனந்தத்துடன் சொன்னான். என்னைத் தொட்டான். நான் நகரவில்லை. ஆமாம்; நான் பயப்படவில்லை. அவன் முகத்தைப் பார்த்ததுமேதான் நான் முடிவு செய்து விட்டேனே, அவன் பந்து எறியும் வகையைச் சேர்ந்தவன் அல்ல என்று! அவன் என்னைத் தூக்கினான். தடவிக் கொடுத்தான்.

அழகன் வீட்டுக்காரரின் தங்கை மகனாம். பக்கத்து ஊராம். பெரிய பரிட்சை எழுதி விட்டு, 'லீவு'க்கு மாமா வீட்டுக்கு வந்திருக்கிறான். இவை எல்லாம்விட அருமையாக அறிமுகப் படுத்துகிறேனே, அவன் என் நண்பன்! நாங்கள் இருவரும் எப்போதும் விளையாடிக் கொண்டிருப்போம். அவன் எனக்கு "பாலா" என்று பெயர் வைத்து விட்டான். ஏன் தெரியுமா? நான் பாலைப் போல் வெள்ளையாக இருக்கிறேனும். போக்கிரிப் பயல், இல்லையா? "பாலா; பாலா" என்று அவன் என்னை அழைப்பான்; நான் "அழகா; அழகா" என்று அழைக்க எண்ணுவேன். முடியாதே! "மே...மே" என்ற சப்தம் தான் எழும்பும்!

★

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. திடீரென்று ஒரு நாள் சப்தம் போட்டுக் கொண்டே ஓடி வந்தான் அழகன். நான் பயந்து, மிரண்டு, நடுங்கியே விட்டேன். "பாலா, பாலா! நான் பாஸ் செய்துட்டேன். இதோ, அப்பா கடிதம் போட்டிருக்கார்!" என்று கத்திக் கொண்டுதான் வந்தான் பாலன். எனக்கு மகிழ்ச்சி. ஆனால் மறுகணம் கவலையும் ஆரம்பமாகி விட்டது. 'அழகன் ஊருக்குப் போய் விடுவானே! ஐயோ, எனக்கு யார் துணை?'—இந்த சந்தேகம் எழும்பியது. சந்தேகம் வீண்போகவில்லை. பாலன் ஊருக்குப் புறப்பட்டு விட்டான். ஆனால் என்னையும் கூட அழைத்துச் செல்ல மாமாவிடம் உத்தரவு வாங்கி விட்டான். அப்பப்பா! அதற்காக அவன் பட்ட தொல்லைகள்—அழுது அழுது மாமாவை சம்மதிக்க வைத்தான் அவன்! எப்படியிருந்தால் என்ன? நான் அழகனுடன் 'ஜாம் ஜாம்' என்று அவன் ஊருக்குப் போனேன்.

### சுலபமே!

கத்தி நீட்டி மனதிலே<br>
புத்தி யூட்ட எண்ணுதல்<br>
கடினம்; மெத்தக் கடினமே!

அன்பு காட்டி மக்களை<br>
பண்பு கொள்ளச் செய்யலாம்<br>
அதுவே மிகச் சுலபமே!

★

நான் வளர்ந்து கொண்டே வந்தேன். அழகனின் அன்பும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்தது. இப்படி இருக்கையில் ஒரு நாள்...

ஜன்னல் ஓரமாக மண்டிக் கிடந்த புல்லை மேய்ந்து கொண்டிருந்தேன். வீட்டுக்குள் பேச்சுக் குரல் கேட்டது. கவனித்தேன்.

"இருபது ரூபாயிக்கு ஒரு சல்லி குறையாது. பணத்தைக் கையில் வையுங்கள்; அழைத்துக் கொண்டு போங்கள். ஆமாம்" என்று அழுத்தமாகப் பேசினார் அழகனின் அப்பா.

மற்றொருவர் "சரிங்க; இந்தாங்க" என்று சொன்னார். இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை அவரிடம் நீட்டினார். 'ஏதோ வியாபார சமாசாரம்' என்று எண்ணினேன். நகர்ந்தேன்.

ஆனால், ஐயோ! நான் என்ன சொல்வது? இருவரும் என்னை நோக்கி வந்தார்கள். ஏன்? எதற்காக? எனக்கு எதுவுமே புரியவில்லை. புதிய மனிதர் என் கழுத்தில் கயிற்றைக் கட்டினார். அப்போதுதான் விபரம் புரிந்தது. ஐயோ! அந்த வியாபாரப் பொருள் எதுவுமல்ல; நானேதான்! நான் கத்தினேன். சுற்று முற்றும் பார்த்தேன். எங்கே அழகன்? எங்கே அழகன்?—இப்படி படபடத்தது என் இருதயம். மிரண்டு ஓடினேன். விடுவாரா அந்த மனிதர்? அவரது இரும்புக் கைகள் என்னை இருகப் பிடித்தன.

நான் தொண்டை வரளக் கத்தினேன். பலன் கிடைத்தது. அதோ, அழகன் வந்துவிட்டான்! வரவில்லை; ஓடி வந்தான்; இரைக்க இரைக்க ஓடி வந்தான். "அப்பா! அப்பா! என்னப்பா இது?' என்று துடித்தான்.

"இனமாக வந்தது: இருபது ரூபாய் தருகிறது!"

—அப்பா சிரித்துக்கொண்டே சொன்னார்.

அழகனின் கண்கள் 'குப்' பென்று சிவந்தன. "அப்பா! என் உயிர் போனாலும் பாலனை விற்க சம்மதிக்க மாட்டேன்" என்றான்.

"சீ! அதிகப் பிரசங்கி! போடா உள்ளே!"—அந்த இரக்கமில்லாத அப்பா அழகனைத் திட்டினார். அழகன் துடித்தான். நயமாகக் கெஞ்சினான். கத்தினான். எனக்காக அடியும் வாங்கினான். ஐயோ, அழுதே விட்டான்!

என்னைப் பிடித்து இழுத்தார் விலைக்கு வாங்கியவர். நான் அசைய மறுத்தேன். உதைத்துத் தள்ளினார் அப்பா. பரபரவென்று இழுத்துக் கொண்டு சென்றார் புதியவர். "பாலா! பாலா!" என்று கத்தினான் அழகன். நானும் கத்தினேன். திரும்பிப் பார்த்தேன். ஐயோ! அந்த முரட்டு அப்பா அழகனை அடித்து, வீட்டுக்குள் தள்ளிக் கொண்டிருந்தார். இந்த முரட்டு மனிதரோ, என்னை இழுத்துக் கொண்டு சென்றார். ஐயோ... அழகா!... அழகா!...

★

நான் ஏன் இங்கு வந்தேன்? என்ன இங்கு கூட்டம்? இந்தக் கூட்டத்திலே அழகனைக் காணோமே!

என்னைக் குளிப்பாட்டுகிறார்கள். நல்லது. உடம்பில் அழுக்கு இருக்கிறது. போகட்டும்! ஆனால், அழகன் எங்கே?

எனக்கு உணவு கொடுத்தார்கள். பசிதான்; ஆனால் சாப்பிட எண்ணமில்லை. கழுத்தில் மாலை போட்டார்கள். நான் அதையா கேட்டேன்? என் கண்கள் வட்டமிட்டன. எங்கே அழகன்?

என்னை ஒரு மேடை அருகில் நிறுத்தினார்கள். நான் எதிரே பார்த்தேன். அழகனில்லை. பயங்கரமான தோற்றத்தோடு—நீட்டிய நாக்கோடு—உருண்ட விழிகளோடு—காளியின் சிலை! எனக்கு பயமாக இருந்தது. அழகன் இருந்தால் எனக்குப் பயமே இருக்காது. அவனில்லையே! அதே சமயம் கையில் அரிவாளுடன் என் பக்கத்தில் வந்தான் ஒரு முரடன். அரிவாளின் பளபளப்பில் என் கண்கள் கூசின. அவன் ஏன் என்னிடம் வருகிறான்? அதுவும் அரிவாளுடன்?-நான் யோசித்தேன். ஆ! எனக்கு அப்போதுதான் விபரம் புரிந்தது. நான் சாகப் போகிறேன்! என்னை வெட்டப் போகிறார்கள்! பலி கொடுக்கப் போகிறார்கள்! நான் அலறினேன். காளியைப் பார்த்தேன்; பார்வையால் கெஞ்சினேன். 'அநியாயமாக வெட்டப் போகிறார்களே. காப்பாற்று' என்று கெஞ்சினேன். அசையவில்லை அந்தச் சிலை! நான்-வாயில்லா பிறவி சாவதில் அதற்கென்ன ஆனந்தமோ! நான் அழுதேன்.

அதற்குள் அந்த முரடன் அரிவாளை ஓங்கினான். நான் சாகப் போகிறேன்! ஐயோ!... கண்களை இறுக மூடிக் கொண்டேன். இதோ, அரிவாள் என் கழுத்தில் விழப் போகிறது...

அதே சமயம்...என்ன சப்தம் அது? "வெட்டாதே! வெட்டாதே!" என்ற அலறல் கேட்டது. நான் கண்களைத் திறந்தேன். பாய்ந்தோடி வந்து கொண்டிருந்தான் அழகன்! நான் மிரண்டேன். ஆனால், அந்த முரடன், ஓங்கிய அரிவாளை நிறுத்தவில்லை. என் கழுத்தை நோக்கிப் பாய்ச்சினான். ஆனால்.. ஓடி வந்த அழகன் அரிவாளைத் தடுத்தான்! மறுகணம் 'ஐயோ' என்று அலறினான். நானும் துடித்துப்போனேன். 'கபக்' கென்று கண்களை மூடினேன். மீண்டும் திறந்தேன். எதிரே மண்ணிலே விழுந்து துடித்துக் கொண்டு கிடந்தது அழகனின் வெட்டுண்ட ஒரு விரல்! ஓங்கிய அரிவாள் என் உயிரைக் காப்பாற்றியது. ஆனால்... அழகனின் விரல் ஒன்றை விழுங்கியது! அழகனின் கையில் இரத்தம்! இரத்தத்தைக் கண்டபின் கூட்டம் அங்கு ஏன் நிற்கப் போகிறது? அது கண நேரத்தில் கலைந்தோடியது!

அழகன் வழிந்தோடிய இரத்தத்தைத் துடைத்துக் கொண்டான். அழுதான், வலி தாங்காமல்! ஆனால் உடனே சிரித்தான், நான் பிழைத்தது கண்டு! அழுது கொண்டும் சிரித்துக் கொண்டும் வீட்டை நோக்கி நடந்தான். நான் பின்னால் சென்றேன்.

அந்த அழகனைப் போல்—அந்த அன்பு மனம் கொண்டவனைப் போல்-தம்பிகளே, தங்கைகளே, உங்களில் ஒவ்வொருவரும் வாழ வேண்டும் இதுதான் என் ஆசை! 'ஒரு ஆட்டுக்குட்டியின் கதையைப் படித்தோம்' என்று எண்ணி மறந்து விடாதீர்கள். நினைவில் வையுங்கள், **அன்பே ஆண்டவன்!**

— சொர்ணம்.

# எழுத்தாணி

ந. மருதப்பன்; சேலம்

(?) அண்ணா எப்போது உயரமாகத் தெரிகிறார்?

மதியழகனுக்கு அருகிலே நிற்கும் போதும், மமதையாளர் வீசும் அடக்குமுறை அம்புகளையும், ஏசல் கணைகளையும் எதிர்த்து நின்று புன்னகை புரியும் போதும் மன்றமேறி அறிவுரை வழங்கும் போதும், அவர் உயரமாகத் தெரிகிறார்.

கே. சேஷாத்ரிநாதன்;
அரக்கோணம்.

(?) ஆயுள் முழுதும் அனுபவிக்கக் கூடிய இனபத்தை எல்லாம், திருமணம் நடந்த சில ஆண்டுகளலேயே அவசர அவசரமாகத் துய்த்தனர் என்று கோவலனையும் கண்ணகியையும் பற்றி சிலப்பதிகாரத்தில் கூறப்படுவதாகவும், அத்தகைய கணணகிக்கு வாழ்க்கைக் கலை தெரியாதென்று அண்ணாதுரை கூறியது தவறுகுமென்றும், ஒரு தமிழரசுக் கழக ஏடு எழுதியிருக்கிறதே— உமது அபிப்பிராயம் என்ன?

ஆயுள் முழுதும் அனுபவிக்கக் கூடிய இன்பத்தை அவசர அவசரமாக துய்த்தது வாழ்க்கைக் கலையாக இருக்க முடியாது என்பதுதான் எனது அபிப்பிராயம்.

(?) மாதவியிடம் வாழ்க்கைக் கலையிருந்தால், கோவலன், திரும்பி கண்ணகியிடம் வருவானேன்?

திரும்பி வந்தது வாழ்க்கைக் கலைக்காக அல்ல! வாழ்க்கை நடத்த வழி பார்ப்பதற்காக!


ஏஜண்டுகள் தேவை!

அழகிய காலண்டர்களுக்கு ஆர்டர்கள் எடுக்க ஏஜண்டுகள் தேவை.

ரூ. 15 முன்பணம் அனுப்பினுல் ஆரம்ப வசையரு அனுப்பப்படும். மூன்று ஆர்டர்கள் வாங்கிக் கொடுத்தபின், அந்த 15 ரூபாய் திருப்பித் தரப்படும்.

விபரங்களுக்கு:-
நாதன்-கம்பெனி,
[காலண்டர் தயாரிப்பாளர்கள்]
திருச்சிராப்பள்ளி.


எஸ். எஸ். சவகர்லால்;
புதுக்கோட்டை.

(?) ஒரு நாடு அன்னிய நாட்டினரால் வெகு எளிதாக அடிமையாக்கப்படுவதற்கு முக்கிய காரணம் எது?

மொழியிலே பற்றின்மைதான்!

க. ந. செழியன்; போத்தனூர்.

(?) நம் நாடு, ஆட்சி உரிமை பெற்றபின் எதிலே சிறப்பு பெற்றது?

இது தெரியாதா? உரிமை பெற்ற ஆறுவது மாதமே உத்தமர் காந்தியை சுட்டுக் கொன்ற "மதபக்தி"க்கு சிறப்புப் பெற்றதல்லவா நம் நாடு!

(●) ந. ராமகிருட்டினன்;
விருதுநகர்.

(?) சுப்ரமணியம், படையாச்சியார்— முதலியவர்கள் நடித்து, 'வருகிறது – வருகிறது' என்று விளம்பரமும் செய்து, காமராசர் பிக்சர்ஸ் தயாரித்து, சென்சாருக்காக சென்னைக்கும் டெல்லிக்கும் போய்க் கொண்டிருக்கும் "நிலச் சீர்திருத்தம்" பற்றி என்ன கூறுகிறீர்கள்?

இந்தப்படம் சென்சாருக்குத் தப்பி வெளியிடப் பட்டாலும், 'ஹை கிளாஸ்' டிக்கெட் ஏறாது என்று நிச்சயமாகத் தெரிகிறது.

தமிழ்மாறன்; கொழும்பு-10.

(?) ஆறு தலையும், பனிரெண்டு கைகளும் கொண்ட கடவுளுக்கு கால்கள் மட்டும் ஏன் இரண்டு?

தலைக்கு இரண்டு வீதம் ஆறு தலைகளுக்கும் பனிரேண்டு கைகள்! ஒரே ஒரு இடுப்பு—அதற்கு இரண்டு கால் என்ற கணக்கில், புராணீகனும், பொம்மை செய்பவனும் சேர்ந்து அந்த முடிவுக்கு வந்திருப்பார்கள்.

எஸ். கந்தையன்; சீர்காழி.

(?) நான் யார்? என் கடமை என்ன?

நீர்தான் சீர்காழி எஸ். கந்தையன்! உமது கடமை மக்களுக்காக உழைப்பது! மடமையை ஒழிப்பது!

வி. ஆர். துரைசாமி;
நாட்டாரம்பள்ளி.

(?) ஆரியர்கள் தங்கள் தலையிலே சிறிய குடுமி வைத்துக் கொள்வது எதற்காக?

முன் காலத்திலே, வீடுகளிலே 'கோட் ஸ்டாண்ட்' கிடையாது என்பதை உமக்கு நினைவூட்டுகிறேன்.

(?) பறவைகளுக்கு கணவன், மனைவி என்ற கட்டுப்பாடு உண்டா? இல்லை; தேவலோகக் கணக்குத்தானு?

இந்த விஷயத்தில் மனிதப் பண்பு கொண்ட பறவைகளும், "தேவலோகப்" பண்பு கொண்ட பறவைகளும் உண்டாம்! மனித வாக்கத்திலேயே சில இடங்களில் "தேவப் பண்பு" தலை நீட்டும்போது பறவைகள் எம்மாத்திரம்?

க. சிதம்பரம்; புரசை, சென்னை.

(?) வாக்காளன் எப்போது தன்னை நினைத்து வருந்துகிறுன்? எப்படி?

அவனும் ஒரு அபேட்சகனுகி விட்டபோது தன்னை நினைத்து வருந்துகிறுன், வோட்டுக்குப் பணம் வாங்கிய துரோகம் இப்போது கொடுக்க வேண்டியிருக்கிறதே என்று!

> இந்த வாரம் பரிசு பெறும் தோழர்;
>
> (●) ந. இராமகிருட்டினன்,
> அறை எண் 48, செந்திக் குமார நாடார் கல்லூரி,
> விருதுநகர்.

தி. சு. அப்பாசாமி;
சூரமங்கலம், சேலம்.

(?) கால்நடைகளின் கண்காட்சியைத் திறந்து வைக்க கவர்னர் போன்ற கனவான்களை அழைப்பவர்களின் துணிவைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

கவர்னர் போன்றவர் கால் நடையாக வரமாட்டார்கள்; காரிலேயே வருவார்கள்-என்ற துணிவு தான் அவர்களுக்கு!

ஜி. கெய்சர்; குமரிமுனை.

(?) காங்கிரசுக்கு தென்னுட்டில் பலத்த எதிர்ப்பு இருந்தும், வடநாட்டுத் தலைவர்கள் வரும் போது எந்த ஆபத்துமின்றி திரும்பிப் போகிறார்கள். ஆனல், அதே தலைவர்களுக்கு எதிராக வட நாட்டிலே நாதுராம் கோட்சேயும், பாபுராவும் தோன்றுகிறார்களே; காரணம் என்ன?

காரணமா தெரியவில்லை? வட நாட்டிலே பெரியாரும் அண்ணாவும் இல்லை!

உரு மணிமேகலை; திருவாரூர்.

(?) புதிய கல்வித் திட்டம் தோற்றுப்போனல், தன் கல்லறைமீது காரி உமிழுங்கள் என்று ஆச்சாரியார் சொன்னரே; அது என்னவாயிற்று? மக்கள் அங்ஙனம் செய்வார்களா?

உமிழ் நீரில் ஜீரண சக்திக்கு வேண்டிய பொருள் கலந்திருக்கிறது என்பதையும், அதை வீணாக்கக் கூடாது என்பதையும் மக்கள் விஞ்ஞானப் பாட மூலமாக உணர்ந்திருக்கிறார்கள் சகோதரி!

அறிஞர் அண்ணா அவர்கள் முன் கூட்டி கூறிய வண்ணமே நடந்து விட்டது என்று தங்கள் 1-7-55 இதழ் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள், அவ் வண்ணமே கம்யூனிஸ்ட் தோழர்கள் விஷயத்திலும் தாங்கள் முன்கூட்டி கூறினமையும் உடனடியாக நடந்துவிட்டது. இந்தூரில் 200 கம்யூனிஸ்ட்டுகள் காங்கிரசில் சேர்ந்தனர்!

—பி. தேவராசன்
கடப்பாக்கம்

'கலப்படம்' பகுதி சிந்தனையாளர்களின் சீரிய பண்பையும், சிறுமதியாளரின் 'சின்ன' புத்தியையும் படம் பிடித்துக் காட்டும் பகுத்தறிவுக் கண்ணாடி.

—எஸ். சேசையராஜ்
திருப்பூர்.

'ஐ. நா. செல்வோம்-அடிமை விலங்கொடிப்போம்' என்பது இனியும் திராவிட நாட்டிலே வடநாட்டு ஏகாதிபத்தியம் ஏற்றம் காணமுடியாது என்பதற்கோர் எடுத்துக்காட்டு.

—நா. இள அரசு
பழனி.

இவ்வார முரசொலி கண்டேன் மகாபாரதம், இயல் இசை கூத்து, சிறுகதை ஆகியவை இடம் பெறுமையினுல் ஏமாற்றமடைந்தேன்.

—வளவன்
வாலாசாரோட்

'வாழமுடியாதவர்கள்' நம்ப முடியவில்லை, ஆனுலும் நடந்திருக்கிறது!

—அ. இளமாறன்
வேலைமாநகர்.

அடுத்த தலையங்கத்தை 'வன்னியரும் திராவிடரும்' என்ற தலைப்பில் எழுதவும்.

—தே. ச. வேலன்
கீழை. கோவல்.

முரசொலியிலே முன்பு வந்தது போல கலைத்தோட்டப் பகுதி அவசியம் தொடங்க வேண்டும்.

—க. வெ. சொல்வண்ணன்
தீத்திப்பாளையம்.

பொய்ப் பிரச்சாரம் செய்துவரும் காங்கிரசுக்காரர்களுக்கு ஐ. நா. செல்வோம்—அடிமை விலங்கொடிப்போம் ஓர் சவுக்கடி.

—ஜி. நாராயணசாமி
புதுக்கோட்டை.

தேன் துளிகள் — இது போன்ற நிறைய தேன் துளிகள் தேவை தேவை. கலப்படம்—அதைப் பெரிதும் விரும்புகிறேன்.

—பா. பாலகிருட்டினன்
பாண்டமங்கலம்

'கலப்படம்' புதிய பகுதி வெகு ஜோர்! 'சுழல் விளக்'கை வாரா வாரம் சுற்ற விடுங்கள்.

—வேந்தன்
பெரம்பூர்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.